Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் வாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop 259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். T.P: 021 222 7835 Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் T.P: 021 222 7560 Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 13 (30.08.2004) திங்கட்கிழமை இதழ்:332

# அரசு யுத்தத்தை ஆரம்பிக்குமேயானால் மீள முடியாத சிக்கலுக்குள் தள்ளுவோம்!

## புலிகளின் முக்கியஸ்தர் பாலகுமாரன் எச்சரிக்கை




(நோர்வே)

**தற்போதைய சமாதான காலத்தில் தமிழர்கள் மீதான நிழல் யுத்தத்தை அரசாங்கம் நடாத்திக் கொண்டு போரை ஆரம்பித்தால் அதனை மீளமுடியாத சிக்கலுக்குள் தள்ளுமளவிற்கு நாங்கள் வளர்ச்சி கண்டுள்ளோம். இவ்வாறு விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.**

நோர்வேயில் நடைபெற்ற தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே - அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இன்றைய திகதியில் தமிழர்கள் வெல்லபபடாத நிலையில் உள்ளனர். இழப்பில்லாமல் எமது உரிமையை வெல்லமுடியுமா என்பதை நாமும் இன்று எதிர்பார்க்கின்றோம். எதேச்சையாக சண்டை தொடங்கினால் கூட அந்தப் போரை வழி நடத்த நாம் கடமைப்பட்டவர்களாகவே உள்ளோம்.

ஏனெனில் நாங்கள் போராடுவது எமது இழந்த வாழ்வை மீட்பதற்காகத்தான். தமிழர்களின் உரிமைப் போராட்டமானது தளம், புலம் என இரண்டு தளங்களிலிருந்து உறுதியுடன் வளர்ந்துள்ளது.

கடந்தகாலப் போரில் இலங்கை அரசாங்கத்துக்கு பல நாடுகள் உதவி புரிந்தன. ஆனால், எங்களுக்கு அரசாங்கமே உதவிசெய்தது. அது தனக்குக் கிடைத்த பல நாடுகளின் ஆயுததளபாட உதவியுடன் தன்னிடமிருந்த மிச்சசொச்சங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## செல்வச்சந்நிதி சென்று திரும்பிய பக்தர்களின் லொறி குடை சாய்ந்து இருபதுக்கும் மேற்பட்டோர் காயம்!

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் தேர்த்திருவிழாவுக்குச் சென்று திரும்பியவேளை - லொறி குடை சாய்ந்ததில் 20 க்கும் மேற்பட்ட பக்தர்கள் படுகாயமடைந்தனர்.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடியற்றிவிட்டு வீடு திரும்பிய பக்தர்களை ஏற்றிக்கொண்டு சென்ற லொறி வல்லைப் பகுதியில் உள்ள வறணி வீதியில் சைக்கிளொன்றை விலத்திச் செல்ல முற்பட்டவேளை - லொறி பாதையிலிருந்து விலகி அருகிலிருந்த வயல் வெளிப்பகுதி யில் குடைசாய்ந்து வீழ்ந்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 20 க்கும் மேற்பட்டோர் உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் இன்றுகாலை 10 மணிக்கு இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் எத்தகைய முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பது குறித்தும், சமகால அரசியல் நிலைமைகள் குறித்தும் இன்றைய சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

## யுத்தநிறுத்த உடன்படிக்கை முறிவடைய வாய்ப்பில்லை!

### கண்காணிப்புக் குழு பிரதித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்து மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு - கிழக்கு மற்றும் தென் பகுதியில் இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் மற்றும் அரசியல் நெருக்கடிகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

ஆனாலும், விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் போர் ஒன்று ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

திருகோணமலை துறைமுகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆவது தொகுதி பட்டதாரிகளுக்கு இரு வாரங்களின் பின்னரே பயிற்சி!

### பிரதி நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படவுள்ள இரண்டாவது தொகுதி வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் இரண்டு வாரங்களின் பின்னரே ஆரம்பிக்கப்படுமென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியலாம்பிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

முதலாவது தொகுதி வேலையற்ற பட்டதாரிகள், தமது தொழில் சார்ந்த பயிற்சியை எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கவுள்ளனர்.

இவர்கள் இந்தப் பயிற்சியை பெற்றபின்னர் அரசாங்க சேவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கொல்லப்பட்ட ரமேஷ்

# புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் மிக முக்கியமான பங்கு வகித்தவர்!

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வாளரான ரமேஸ் என்று அழைக்கப்படும் திஸ்ஸவீரசிங்கம் துஷ்யந்தன் புளொட் மோகனுக்கு அடுத்த நிலையில் இருந்தவரெனவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து பல தாக்குதல்களில் பங்குகொண்டவர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மிலேனியம் சிற்றி புலனாய்வு பாதுகாப்பு இல்லத்தை மையமாக வைத்து செயற்பட்ட இவர் இரு வருடங்களுக்கு முன்னர் அந்தப் பாதுகாப்பு இல்லம் பொலிஸாரால் சோதனையிடப்பட்ட போது அங்கிருந்து தப்பியோடியிருந்தார்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற ஊடுருவல் தாக்குதல்களில் இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்து முக்கிய பங்கு வகித்த இவர் 2001 ஆம் ஆண்டு நல்லதண்ணிப் பிரதேசத்தில் அப்போதைய மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த லெப்.கேணல் நிசாம் மீது தாக்குதலை நடத்தியிருந்தார். இந்த தாக்குதலில் நிசாம் வீரச்சாவடைந்ததுடன், அவருடன் கூடச் சென்றவர் படுகாயமடைந்தார்.

அத்துடன், 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் கிழக்கில் பத்தரை கடைச்சந்திப்பகுதியில் புலிகளின் தொலைத்தொடர்புப் பொறுப்பாளர் மனோ மாஸ்ரர் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தி அவர் வீரச்சாவடையக் காரணமாக இருந்தவரும் இவர்தான்.

இவர் மீதான தாக்குதலை நடத்தியவர்கள் இவர் வைத்திருந்த கையடக்கத் தொலைபேசியையும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ உளவாளிகளுக்கு பாதுகாப்பை பலப்படுத்தினாலும் அவர்களை காப்பாற்ற முடியாது!

### பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ உளவாளிகளை இலக்காக் கொண்டு நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுப்பதற்கு பாதுகாப்பை பலப்படுத்துவதனால் மட்டும் அவர்களை காப்பாற்ற முடியாதென பொலிஸ் மா அதிபர் இந்திர டீ.சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி வடக்கு கிழக்குப் பகுதியிலிருந்து வெளியிடங்களுக்கு செல்கின்ற மற்றும் அந்தப் பிரதேசங்களுக்கு செல்கின்றவர்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ ஏயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR Your friend in the skies...
Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ். போதனா வைத்தியசாலையில் இடவசதியின்றி நோயாளர்கள் சிரமம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பால் நிலத்தில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை பெறவேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலமாக சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னிப் பிரதேசத்திலிருந்தும் நாளாந்தம் நோயாளர்கள் வந்தவண்ணமேயுள்ளனர்.

அதுமட்டுமன்றி, யாழ்.மாவட்டத்தில் தற்போது காய்ச்சல் தீவிரமாக பரவ ஆரம்பித்திருக்கின்றமையாலும், வீதி விபத்துக்களின் அதிகரிப்பாலும், நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து விடுதிகள் நிரம்பி வழிகின்றன.

இந்த நிலையில் - விடுதிகளில் போடப்பட்டுள்ள கட்டில்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதுடன், போதிய இடவசதிகளும் காணப்படாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதுடன், நிலத்தில் பாய்களில் படுக்கவிடப்பட்டே சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக விரைவான நடவடிக்கையொன்றை யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் எடுக்கவேண்டுமெனவும் - நிலத்தில் நோயாளர்கள் தங்கவைக்கப்படுவதால் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகவும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## தீவுப்பகுதி கிணறுகளில் குடிநீர் வற்றுகிறது

(யாழ்ப்பணம்)

யாழ்.குடாநாட்டை அண்டிய பகுதிகளிலுள்ள வேலணை, ஊர்காவற்துறை, புங்குடுதீவு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள நீர் நிலைகள் வற்றிப்போயுள்ளன.

இதனால், இந்தப் பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் தமது அன்றாடத் தேவைக்கான குடிநீரைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கிவருகின்றனர்.

தற்சமயம் குடாநாட்டில் அதிகரித்து வரும் கடும் வெப்பமே காரணமெனத் தெரியவருகிறது.

இவ்வாறு வரட்சி ஏற்பட்டுவரும் காரணத்தினால் தீவுப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவதுடன், நோய் தொற்றவும் வாய்ப்புள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (100)

## ஆசிரிய கலாசாலை I ஆம் வருட பரீட்சை

பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதித் தேர்வு இன்றும், நாளையும் கலாசாலையில் நடைபெறுமென அதிபர் ஆர்.சதாசிவமூர்த்தி அறிவித்துள்ளார்.

இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி - கடந்த 28 ஆம் திகதியுடன் முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது. (100)

## ஆலய வீதி விஸ்தரிப்பு

(மானிப்பாய்)

சுழிபுரம் கம்பளை அம்பாள் ஆலய வடக்குப் பக்க வெளிவீதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வடக்குத் திசையில் வசிக்கும் காணியின் உரிமையாளர் இருவர் தமது சொந்தக்காணியை ஆலயத்தின் நலன்கருதி வழங்கியதைத் தொடர்ந்தே மேற்படி ஆலய வீதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (100)

## பல்கலை அனுமதிப் படிவம் மூலம் சித்தமருத்துவத்துக்கும் ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சித்தமருத்துவ வைத்தியத் துறைக்கு மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் முதல் படிவத்தினை விண்ணப்பிப்பதன் மூலம் இம்முறை பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியும். அதற்கான விண்ணப்பத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

இந்தத் தகவலை பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

கடந்த காலங்களில் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்பே மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கமுடிந்தது.

ஆனால் இம்முறை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போதே சித்தமருத்துவத் துறைக்கும் விண்ணப்பிக்கமுடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தை விண்ணப்பதாரிகள் பயன்படுத்தி வெற்றி பெறவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வைத்தியசாலைக்கு எக்ஸ்றே இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சி.ஆம் எக்ஸ்றே இயந்திரம் சத்திரசிகிச்சைக்காக அரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இதை யாழ்.மாவட்ட அரச அதிபர் பத்மநாதன் வழங்கியதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்மூலம் முறிவு, நெறிவு போன்ற சத்திரசிகிச்சைகளை இலகுவாகச் செய்யமுடியும் எனவும் அவை மேலும் தெரிவித்தன.

## தீவக வலய பாடசாலைகளுக்கிடையிலான சமூகக்கல்விப் போட்டி முடிவுகள்!

(தீவகம்)

தீவக வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட வலய மட்ட சமூகக்கல்விப் பாடப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் - வலய திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு -

### தரம் 6,7

பிரிவு 1

முதலாம் இடம் - து.தனுஷன் (சேர் வைத்திலிங்கம் து.ம.ம.வித்தியாலயம்), 2 ஆம் இடம் - கே.துஷ்யந்தன் (நயினாதீவு ஸ்ரீ கணேசா), 3 ஆம் இடம் - ச.கஸ்தூரி (சேர் வைத்திலிங்கம் து.ம.ம. வித்தியாலயம்).

### தரம் 8,9

பிரிவு 2

முதலாம் இடம் - க.பகீரதி (நெடுந்தீவு றோ.க. வித்தியாலயம்), 2 ஆம் இடம் - த.குகதாஸ் (சேர் வைத்திலிங்கம் து.ம.ம. வித்தியாலயம்), 3 ஆம் இடம் - இ.சிந்துஜா (நாரந்தனை றோ.க. வித்தியாலயம்).

### தரம் 10,11

பிரிவு 3

முதலாம் இடம் - த.சிவகரன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம வித்தியாலயம்), 2 ஆம் இடம் -கு.விஜிதா (சேர் வைத்திலிங்கம் து.ம.ம வித்தியாலயம்), 3 ஆம் இடம் - ந.ஜெயதாஸ் (சேர் வைத்திலிங்கம் து.ம.ம. வித்தியாலயம்).

### தரம் 12,13

பிரிவு 4

முதலாம் இடம் - சி.அசோக்குமார் (சேர் வைத்திலிங்கம் து.ம.ம வித்தியாலயம்), 2 ஆம் இடம் - ஸ்ரீ. சதாசிவன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம்), 3 ஆம் இடம்- ம.பத்மறாஜ் (நெடுந்தீவு மகா வித்தியாலயம்).



போராளி தமிழ்க்கவி எழுதிய 'இருள் இனி விலகும்' எனும் நாவல் வெளியீடு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடந்த வேளை நூலுக்கான பதிலுரையினையும், நன்றியுரையினையும் நூலாசிரியர் ஆற்றுவதைக் காணலாம்.


## விற்பனைக்கு

Panasonic CD Sterio System (CD பிளேயர் - Sc.PM - 137) 1000W - 5 CD - Charger, நல்ல நிலையில் உள்ள T.V ஸ்ராண்ட் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு - நிறஞ்சன் - 55/23, "பிரசாந்தி", சபாபதி, தலையாழி, கொக்குவில். T.P - 2225179, 0777 570131












மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நிதித்துறை.

## தமிழ் ஆசிரியப் பணிநிலைக்கான வேண்டுகை

பகுதி நேரமாகவோ, முழுநேரமாகவோ தமிழ்மொழி, தமிழ், இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிக்கக்கூடிய இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள்:
1. பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்.
2. தமிழ்ப் பட்டதாரிகள்.
3. பண்டிதர், புலவர் பட்டங்கள் பெற்றோர்.

02. பட்டறிவு:
பத்தாண்டுகளுக்குக் குறையாத தமிழ் ஆசிரியப்பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

03. அகவை:
40 தொடக்கம் 65 வரை.

04. வேண்டுகை முடிவுநாள்: 15.09.2004

05. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

06. நேர்முகத் தேர்விற்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தரவேண்டும்.

07. சம்பளம்: முழுநேர ஆசிரியராகத் தெரிவுசெய்யப்படுவோருக்கு தகைமைக்கும், பட்டறிவிற்குமேற்ப பத்தாயிரம் உருபாவிற்குக் குறையாச் சம்பளம் வழங்கப்படும்.

08. நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் தங்களின் அஞ்சல் முகவரிக்குக் கடிதமூலம் அனுப்பிவைக்கப்படும்.

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை.

(சி/2814)


## நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு -
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்மோட்டை இல்மனைட் ஆலையை மீள இயங்கவைக்கும் முயற்சிகள்!

(திருகோணமலை)

திருகோணமலை - புல்மோட்டை பகுதியில் அமைந்துள்ள இல்மனைட் தொழிற்சாலையை மீள இயங்க வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16 வருடங்களுக்கு முன் இந்த தொழிற்சாலைக்கான பிரதான நீர் வழங்கல் குழாயை விடுதலைப் புலிகள் தகர்த்தமையை தொடர்ந்து இந்த தொழிற்சாலை மூடப்பட்டது.

புல்மோட்டை கடற்பரப்பிலிருந்து மண்ணை அள்ளி அதில் இல்மனைற்றை பிரித்து ஏற்றுமதி செய்யும் இந்த தொழிற்சாலை இயற்கை வளங்களை அழிப்பதோடு, கடல் நீர் உட்புகுவதற்கும் காரணமாக இருந்து வந்தது.

இந்தப் பகுதியில் இன்மனைற் அகழ்வில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டு நிறுனங்களுக்கு சொந்தமான இரு கப்பல்கள் முறையே 1996 - 1997ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த தொழிற்சாலையின் மீள் கட்டுமாண பணிகள், அமைச்சர் அதாவுல்லாவின் கீழ் செயற்படும் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்படுவதாக தெரியவருகிறது.

உலகின் மிகப் பெரிய தைட்டேனிய மூலவளங்களைக் கொண்ட பகுதியாக புல்மோட்டை இனம்காணப்பட்டுள்ளது.

இல்மனைட்டை கொண்டு தயாரிக்கப்படும் தைட்டேனியம் உலகின் முக்கியமான பல உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள் என்பது குறிப்பிடத்தக்கது.

புல்மோட்டை பகுதியில் 5 மில்லியன் தொன் இல்மனைட் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (01)

# கணினி தரவுக்குறிப்பு இயக்குநர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் நியமனம் பெற்றுள்ள கணினி தரவுக்குறிப்பு இயக்குநர்களுக்கான 1 ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாக, அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவலங்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சீ. மன்னப்பெரும அறிவித்தார்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரியமுறையில் தயாரித்து, விண்ணப்பிக்கும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீடசைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (100)

# மோட்டார் வாகன பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

## போட்டிப் பரீட்சை நவம்பரில் நடத்த ஏற்பாடு

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு, இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" பிரிவுக்கு மோட்டார் வாகனப் பரிசோதகர்களை, ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு, மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் பி.விஜயரட்ணவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து உரியமுறையில் பூரணப்படுத்தி விண்ணப்பிக்கும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "மோட்டார் வாகன பரிசோதகர் பதவி" எனக் குறிப்பிட்டு, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம். எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05என்ற முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கும்படி ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதற்கான பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதமளவில் கொழும்பில் மாத்திரமே நடைபெறுமென மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்தார்.

இதன் மேலதிக விபரங்களை கடந்த 27 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (100)

# லெப். கேணல் ரஞ்சன் நினைவு நாள் நிகழ்வுகள்

அம்பாறை - வம்மியடிக்குளம் பகுதியில் 1995ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி விசேட அதிரடிப் படையினருடனான மோதலின் போது, வீரச்சாவடைந்த அம்பாறை மாவட்ட முன்னாள் சிறப்புத் தளபதி லெப். கேணல் ரஞ்சனின் (மாருதியன்) ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் இடம்பெற்றது.

பிரதான நிகழ்வு அம்பாறை திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை முதல் இடம்பெற்றது. உடும்பன்குள கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலாகரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வர்மா ஏற்றிவைத்தார். இந்த நினைவு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் கலந்து கொண்டார்.

இதன்பின் ரஞ்சன் நினைவாக விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசில்கள் வழங்கப்பட்டன. பின்னர் சிறப்புரைகளுடன் நினைவுதின நிகழ்வுகள் நிறைவடைந்தன. (07)

# துறைமுக ஒப்பந்தங்கள் குறித்து ஆராய்வதற்கு அமெரிக்க உயர் அதிகாரிகள் கொழும்பு வருவர்

இலங்கையில் உள்ள துறைமுகங்களின் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வது குறித்து ஆராய்வதற்காக அமெரிக்க கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகள்குழு ஒன்று அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளது.

கொழும்பில் சில தினங்கள் தங்கியிக்கும் இந்த அதிகாரிகள் குழு கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு சென்று துறைமுகங்களின் பாதுகாப்பு குறித்து ஆராயவுள்ளது.

இத்துடன், இந்தக்குழு துறைமுக பாதுகாப்பு பொலிஸார் மற்றும் துறைமுக உயர் அதிகாரிகள் கடற்படை அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ள தாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை கொழும்புத்துறைமுகத்தில் கதிர்வீச்சுக்களை கண்டறியும் 9 நவீன உயர்சக்தி வாய்ந்த கருவிகளும் அண்மையில் பொருத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

## தனியார் பஸ் கட்டணம் உயர்த்தப்படுகின்றது

தனியார் சிற்றூர்திகளின் ஆகக் குறைந்த கட்டணங்கள் 3 ரூபாவில் இருந்து 3 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வருகிறது. ஏற்கனவே 3 ரூபா கட்டணங்களை 4 ரூபாவாக உயர்த்தாவிட்டால் தாம் சேவை புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக சிற்றூர்தி சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இந்த நிலையில் கடந்த வெள்ளியன்று அமைச்சரவை உபகுழுவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது 3 ரூபா 50 சதத்துக்கான இணக்கம் ஏற்பட்டுள்ளது.

# நாட்டில் 38 லட்சம் வாக்காளருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை

## - தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள வாக்காளர்களில் 38 லட்சம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை எனத் தேர்தல் ஆணையாளர் தனது நிர்வாக அறிக்கையில் தெரிவித்தார்.

இந்த அறிக்கையின்படி, தேசிய அடையாள அட்டையை நூற்றுக்கு 64 சதவீதமானவர்களும் வைத்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் தேர்தல் ஆணையாளரின் நிர்வாக அறிக்கைகளின்படி, தேர்தல் வாக்கு இடாப்புத் தயாரிக்கும் போது 90 லட்சத்து 77 ஆயிரத்து 430 வாக்காளர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்துள்ளனர்.

இப்பொழுது நாட்டின் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 1 கோடி 28 லட்சத்து 99 ஆயிரத்து முப்பத்திரண்டு. தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் தொகை 38 லட்சம் பேராகும்.

அடையாள அட்டை உள்ள வாககாளர்களில் 83 சதவீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் உள்ளனர்.

கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் அடையாள அட்டை உள்ள வாக்காளர்கள் 80 வீதம் என்றும், வன்னி மாவட்டத்தில் அடையாள அட்டை உள்ள வாக்காளர்கள் மிகக் குறைந்த அளவில் இருக்கின்றார்கள். அங்கு 34 சதவீத வாக்காளர்கள் மாத்திரமே அடையாள அட்டைகள் வைத்திருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 59 வீத வாக்காளர்களும், அநுராதபுர மாவட்டத்தில் 60 வீதவாக்காளர்களிடம் அடையாள அட்டைகள் இருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பு கடன் செலுத்த முடியாத நிலையில் அரசு

## - நிதி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலரின பெறுமதி அதிகரித்திருப்பதால், இலங்கை - வெளிநாடுகளில் பெற்றுள்ள கடன்களின் தவணைப் பணங்களும் உயர்ந்து போயுள்ளதாக நிதி அமைச்சின் வெளிநாட்டு வழங்கல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் உத்தேச தவணைப் பணத்துக்கு மேலதிகமாக 10 கோடி ரூபா அதிகமாக அரசு செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த வருடத்தில் அமெரிக்க டொலர் 400 மில்லியன் கடன் பணம், தவணைப் பணமாக செலுத்தப்பட்டுள்ளதென்றும். இந்த வருடம் மேலதிகமாக 100 மில்லியன் டொலர் மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# பிரபல அரசியல்வாதிகள் நால்வரை கைது செய்வதற்கு நடவடிக்கை

## - சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக பிரபல அரசியல்வாதிகள் நால்வரைக் கைதுசெய்வதற்கு, ஜனாதிபதியின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர சில்வா தெரிவித்தார்.

அந்த அரசியல்வாதிகள் நால்வரில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அடிக்கடி அழுத்தங்கள் கொடுக்கப்படுவதாகவும், அவர்களுடன் அரசோடு தொடர்புடைய முக்கிய முக்கியஸ்தர் ஒருவர் இருப்பதாகவும் அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக அரசியல் நிறுவனங்களின் தலைவர்களையும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகக் கைதுசெய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பான அறிக்கையினை விரைவில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்புச்சபை ஆயத்தமாகி வருகின்றது என்று அதிகாரசபையின் தலைவர் கூறியுள்ளார். (தே)

# ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டில் ஜே.வி.பி.யின் தலைவர் பங்குபற்றுவார்

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்பட அந்தக் கட்சியின் அங்கத் தவர்கள் நால்வர் அடுத்தவாரம் இந்தியாவிலும், சீனாவிலும் நடைபெறவுள்ள மாநாடுகளில் பங்குபற்ற வுள்ளனர்.

செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதிவரை சீனாவில் பீஜிங் நகரில் நடைபெறவுள்ள ஆசியாவின் அரசியற் கட்சிகளின் சர்வதேச சம்மேளனத்தில் பங்குபற்றுவதற்காக -

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோரும், அடுத்த மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரையும் இந்தியாவின் சென்னையில் நடைபெறவுள்ள, அனைத்து இந்திய முற்போக்குக் கட்சிகளின் தேசிய மாநாட்டில் மனிதவள அபிவிருத்தி கலாசார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

சீனாவின் பீஜிங் நகரில் இந்த இடதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைந்து நடாத்தும் மகாநாட்டில் இதுவரை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியே பங்குபற்றி வந்தது. இந்தத் தடவை ஜே.வி.பியைப் பங்குபற்றுமாறு ஆசிய அரசியல் கட்சிகளின் சம்மேளனத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (தே)

# வீதிப் போக்குவரத்தை மீறுவோருக்கு எதிராக புதிய சட்டமூலம் அமுல்படுத்தப்படும்

## - பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வீதிப்போக்குவரத்து விதிகளை மீறும் பாதசாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் வகையில் புதிய சட்டம் அமுல்செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் விபத்துக்களை கட்டுப்படுத்தும் முகமாக அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த புதிய சட்டத்தின் மூலமாக, போக்குவரத்து விதிகளை மீறும் பாதசாரிகளிடம் இருந்து அபராதம் அறவிடப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ்மா அதிபர் இந்திர டீ சில்வா இந்த தகவலைத் தெரிவித்தார்.

கவனமற்ற பாதசாரிகள் மூலமாக அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுவதாகவும், வீதிப்போக்குவரத்து விதிகளை மீறும் வகையில் வீதிக்கடவைகளற்ற இடங்களில் அவதானிப்புக்கள் இன்றி பாதசாரிகள் வீதிகளைக் கடப்பதன் மூலமே பெரும்பாலான விபத்துக்கள் சம்பவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அபராதம் விதிக்கப்பட்டவர்கள் தமது அபராத தொகையை தபால் நிலையங்களில் செலுத்திவந்தனர். இந்த நடைமுறை மாற்றப்பட்டு இனி நேரடியாக பொலிஸ் நிலையங்களில் அபராதம் செலுத்தும் முறை அமுல்செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.(01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் அமெரிக்காவுக்கு இரண்டு தங்கம்



(ஏதென்ஸ்)

4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் அமெரிக்காவுக்கு 2 தங்கங்கள் கிடைத்துள்ளன.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் நேற்றுமுன்தினம் தடகளத்தில் 9 பிரிவுகளில் இறுதிப் போட்டிகள் நடந்தன. இதன் போது அஞ்சல் ஓட்டத்தில் அமெரிக்காவுக்கு 2 தங்கப் பதக்கம் கிடைத்தது.

ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் வில்லியம்சன், ஜெர்மி வாரியர், ஹாரிஸ், டெரிக் புரு ஆகியோரை கொண்ட அமெரிக்க அணி தங்கப் பதக்கம் பெற்றது. இந்த அணி பந்தய தூரத்தை 2 நிமிடம் 55.91 வினாடியில் கடந்தது. அவுஸ்ரேலியா 3 நிமிடம் 00.60 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், நைஜீரியா 3 நிமிடம் 00.90 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றன.

பெண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் டிரோட்டர், ஹெண்டர்சன், ரிச்சர்ட்ஸ், ஹென்னாகான் ஆகியோரைக் கொண்ட அமெரிக்க அணி தங்கப் பதக்கம் பெற்றது. இந்த அணி பந்தய தூரத்தை 3 நிமிடம் 19.01 வினாடியில் கடந்தது.

ரஷ்யா 3 நிமிடம் 20.16 வினாடியில் கடந்து 2 ஆவது இடத்தையும், ஜமேக்கா 3 நிமிடம் 22.00 வினாடியில் கடந்து 3 ஆவது இடத்தையும் பிடித்தது.

ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் அமெரிக்காவுக்கு இங்கிலாந்து அதிர்ச்சி கொடுத்து ஜேசன், கேம்ப்பெல், டேவ்னிஷ், லீவிஸ் பிரான்சிஸ் ஆகியோரைக் கொண்ட இங்கிலாந்து அணி 38.07 வினாடியில் கடந்து தங்கப்பதக்கம் பெற்றது.

பற்றனைப் பெறுவதில் ஏற்பட்ட கால தாமதத்தால் அமெரிக்கா தங்கப் பதக்கத்தை இழந்தது. கிராபோர்ட், கேட்லின், மில்லர், கிரீனி ஆகியோரைக் கொண்ட அமெரிக்க அணி 38.08 வினாடிகளில் கடந்து 2 ஆவது இடத்தையும், நைஜீரியா 38.23 வினாடியில் கடந்து 3 ஆவது இடத்தையும் பிடித்தன.

ஆண்களுக்கான ஐயாயிரம் மீற்றர் ஓட்டம் விறுவிறுப்பாக அமைந்தது. மொராக்கோ வீரர் ஹிச்சம் எல்குரோஜி 13 நிமிடம் 14.39 வினாடியில் கடந்து தங்கப்பதக்கம் பெற்றார். அவர் பெற்ற 2 ஆவது தங்கம் இதுவாகும். ஏற்கனவே 1500 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்திருந்தார்.

பெகலே (எத்தியோப்பியா) 13 நிமிடம் 14.59 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், கிப்கோக் (கென்யா) 13 நிமிடம் 15.10 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

800 மீற்றர் ஓட்டத்தில் ரஷ்ய வீரர் யூரி ஒரு நிமிடம் 44.45 வினாடியில் கடந்து தங்கப் பதக்கம் பெற்றார்.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த மபுலினி ஒரு நிமிடம் 44.61 வினாடியில் கடந்து 2 ஆவது இடத்தையும், வில்சன் கிப்கேட்டர் (டென்மார்க்) ஒரு நிமிடம் 44.65 வினாடியில் கடந்து 3 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

பெண்களுக்கான 1,500 மீற்றர் ஓட்டத்தில் கெல்லி ஹோல்ம்ஸ் (இங்கிலாந்து) 3 நிமிடம் 57.90 வினாடியில் கடந்து முதல் இடத்தைப் பிடித்தார். அவர் பெற்ற 2 ஆவது தங்கம் இதுவாகும். ஏற்கனவே 800 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்திருந்தார். தோம்ஷேவா (ரஷ்யா) வெள்ளிப் பதக்கமும், மரியா (ருமேனியா) வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

## உதைபந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்ரீனா தங்கம் வென்றது

(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா முதல்முறையாக தங்கம்வென்று சரித்திரம் படைத்தது.

இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனா 1-0 என்ற கோல் கணக்கில் தென் அமெரிக்க நாடான பராகுவேயை வீழ்த்தியது. கடந்த 52 ஆண்டு காலத்தில் ஆர்ஜென்ரீனா முதல்முறையாக இந்தச் சாதனையை புரிந்துள்ளது.

ஆர்ஜென்ரீனா தரப்பில் கார்லோஸ் டெவஜ் இந்தக் கோலை அடித்து அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். ஒலிம்பிக் போட்டிகளில் அவர் அடித்த 8 ஆவது கோல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றும் தங்கத்தை கோட்டைவிட்ட பராகுவே அணி ஏமாற்றமடைந்தது. இறுதிப் போட்டியின்போது அந்த அணியின் இரண்டு வீரர்கள் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். இதனால், அந்த அணி 9 வீரர்களுடனேயே விளை யாடியது.

20 வயதான டெவஜ் முதல்பாதி ஆட்டத்தின் தொடக்கத்திலேயே இந்த கோலை அடித்துவிட்டார். இதனைத்தொடர்ந்து ஆர்ஜென்ரீனாவின் ஆதிக்கம் போட்டியில் நீடித்தது. அந்த அணி இறுதிப் போட்டியில் கோல் எதனையும் பெறவில்லை என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

தற்போதைய ஒலிம்பிக் போட்டியில் அதிகமான கோலடித்தவர் பராகுவே வீரர் ஜோஸ்கார்டோஜோ. 12 கோல் அடித்த இவர் காயம் காரணமாக இறுதிப் போட்டியில் பங்கேற்காதது பராகுவேக்கு பாரிய இழப்பாகும். அந்த அணி இறுதிப் போட்டியில் நுழைய ஜோஸ் முக்கிய பங்கு வகித்தார்.

அதேபோல ஆர்ஜென்ரீனா அணியிலும் பார்சிலோனா நட்சத்திர வீரரான ஜேவியர் சவியோலா காயம் காரணமாக இறுதிப் போட்டியில் விளையாட முடியவில்லை. இருந்த போதிலும் அந்த அணி தங்கம் வென்று சரித்திரம் படைத்துவிட்டது.

ஆர்ஜென்ரீனா அணி இதுவரை உலகக் கோப்பைக் கால்பந்து போட்டியில் இரண்டுமுறை கோப்பையைக் கைப்பற்றியுள்ளது. ஆனால், ஒலிம்பிக்கில் ஒருமுறைகூட தங்கப் பதக்கம் வென்றது கிடையாது. 1920 மற்றும் 1996 ஆகிய இரண்டு ஒலிம்பிக்கில் அந்த அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.




## ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டி அவுஸ்ரேலியா தங்கம் வென்றது!

(ஏதென்ஸ்)

ஒலிம்பிக் ஆண்கள் பிரிவு ஹொக்கியில் முதல் முறையாக தங்கத்தைப் பெற்றது அவுஸ்ரேலியா. ஏதென்ஸில் கட்ந்த வெள்ளிக் கிழமை இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் தற்போதய சம்பியனான ஹொலண்டை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலம் இச்சாதனையைப் புரிந்தது அவுஸ்ரேலியா. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் 29 ஆவது நிமிடத்தில் ஹொலண்டின் ரோனால்ட் பிரௌவர் கோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார். முதல் பாதியில் 1-0 என்ற கணக்கில் ஹொலண்ட் முன்னிலை பெற்றது.

ஆட்டத்தின் 37 ஆவது நிமிடத்தில் அவுஸ்ரேலியாவின் டிராவில் புருக்ஸ் கோலடித்து சமநிலையை உருவாக்கினார். அதன் பிறகு இரு அணிகளும் கோல் எதும் அடிக்கவில்லை.

அதையடுத்து கூடுதல் நேரம் அளிக்கப்பட்டது அதில் டேமிடாவர் கோலடித்து அவுஸ்ரேலியாவுக்குத் தங்கத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

இதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தங்கம் வெல்லும் ஹொலண்ட்டின் முயற்சிக்கு தடைபோடப்பட்டது. இந்தியா மட்டுமே தொடர்ந்து மூன்றுமுறை தங்கம் வென்றுள்ளது.

ஹொலண்ட் வெள்ளிப் பதக்கத்தை வென்றது. முன்னதாக வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் 4-3 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வென்றது ஜேர்மனி. ஆட்டத்தின் இறுதியில் இரு அணிகளும் தலா 3 கோல்களை அடித்திருந்தன கூடுதல் நேரத்தில் கோல் அடித்து ஜேர்மனி வென்றது.

# ஹொலண்ட் முத்தரப்பு போட்டி; அவுஸ்ரேலியா வெற்றி பெற்றது

ஹொலண்டில் நடைபெற்றுவந்த முத்தரப்பு சர்வதேச ஒரு நாள் போட்டியில் நேற்று முன்தினம் அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், அவுஸ்ரேலிய அணி 16 ஓட்டங்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அவ்வணியின் மத்யூ ஹைடன் மற்றும் ஹடின் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 21 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஹடின் பத்து ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் அணித்தலைவர் பொண்டிங் ஹைடனுடன் இணைந்தார். இருவரும் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் பொண்டிங் 25 ஓட்டங்களுடன் அப்துல் ரசாக்கின் பந்து வீச்சில் இம்ரான் பர்கத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக அவுஸ்ரேலிய அணி ஐம்பது ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அவ்வணி சார்பாக ஹைடன் 59, பொண்டிங் 25, லீமன் 40, சைமன்ஸ் 36, ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர். இதில் பாகிஸ்தான் 15 ஓட்டங்களை உதிரிகளாகவும் விட்டுக் கொடுத்தது.

பந்து வீச்சில் அக்தர் 3, சமி, சபீர் அகமட், மற்றும் அப்துல்ரஸாக் ஆகியோர் தலா ஒவ்வொருவிக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 193 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடிய வேளையில் அவ்வணியின் விக்கெட்டுக்கள் சீரான முறையில் விழத்தொடங்கியது.

இறுதியில் அவ்வணி 47.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் அவுஸ்ரேலிய அணி 16 ஓட்டங்களை உதிரிகளாக விட்டுக்கொடுத்தது.

இவ்வணி [illegible] 27, இம்ரான்பர்கத் 17, சொகைப் மலிக் 36, யூசுப்யுகானா 43, அப்துல்ரஸாக்26, ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் சைமன்ஸ், லீமன் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் மக்ராத், ஜிலெஸ்பி, பிரட்லீ மற்றும் பிரட் [illegible] ஆகியோர் ஒவ்வொருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக அன்ட்ரு சைமன்ஸ் தெரிவானார்.




ஆண்கள் கூடைப்பந்து

## ஆர்ஜென்ரீனாவிடம் அமெரிக்கா தோல்வியைத் தழுவியது

(ஏதென்ஸ்)

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் அமெரிக்க கூடைப்பந்து அணியினர் அதிர்ச்சித் தோல்வியுற்றனர். வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், ஆர்ஜென்ரீனா 89-81 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவின் தங்கப் பதக்க கனவைத் தகர்த்தனர்.

முதல் பாதிநேர ஆட்டத்திலும் அமெரிக்கா பின்னடைவு பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (38-43)

1992 ஒலிம்பிக் போட்டியிலிருந்து தங்கப் பதக்கத்தை அமெரிக்கா யாருக்கும் விட்டுக் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 56 ஆண்டுகளுக்குப் பின்னர் எகிப்திற்கு தங்கப் பதக்கம்

(ஏதென்ஸ்)

ஒலிம்பிக்கில் 56 ஆண்டுகளுக்குப் பின்னர் எகிப்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

அந்நாட்டின் மல்யுத்த வீரர் கராம் இப்ராஹிம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 96 கிலோ எடைப் பிரிவுக்கான போட்டியில் முதலிடம் பெற்றதன் மூலம் எகிப்துக்கு இப்பெருமை கிடைத்துள்ளது.

கிரெகோ ரோமன் போட்டியில் பங்கேற்ற இப்ராஹிம் 12-1 என்ற புள்ளிக் கணக்கில் ஜோர்ஜிய வீரர் ரமாஸ் நோநேட்டோவை வென்றார்.

## உயரம் பாய்தல் போட்டியில் ரஷ்ய வீராங்கனை உலக சாதனை

(ஏதென்ஸ்)

பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் ரஷ்ய வீராங்கனை யெலீனா செலிசா ரென்கோ 2.06 மீற்றர் தாண்டித் தங்கப் பதக்கம் பெற்றார். இது புதிய ஒலிம்பிக் சாதனையாகும். 1996 ஆம் ஆண்டு அட்லாண்டா ஒலிம்பிக்கில் பல்கேரியாவைச் சேர்ந்த ஸ்டெப்வரா 2.05 மீற்றர் உயரம் தாண்டியதே சாதனையாக இருந்தது. அவர் 2.09 மீற்றர் தாண்டியது இன்றுவரை உலக சாதனையாக இருந்து வருகிறது. தென்னாபிரிக்காவை சேர்ந்த குளோட் 2.02 மீற்றர் உயரம் தாண்டி 2 ஆவது இடத்தையும் உக்ரைன் வீராங்கனை விக்டோரியோ 3 ஆவது இடத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான ஈட்டி எறியும் போட்டியில் நோர்வேக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது. அந்நாட்டைச் சேர்ந்த துரோக்ஹிட்சன் 86.5 மீற்றர் தூரம் வீசினார்.

லத்தியாவைச் சேர்ந்த வாடிமிஸ் 84.95 மீற்றர் தூரம் வீசி வெள்ளிப் பதக்கமும், ரஷ்யாவைச் சேர்ந்த செர்ஜி 84.84 மீற்றர் தூரம் வீசி வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

16 வயதுக்குட்பட்ட கிரிக்கெட்

## யாழ்.மாவட்ட அணி நாளை தம்புள்ளவிற்கு செல்கின்றது

(யாழ்ப்பாணம்)

16 வயதுக்குட்பட்ட மாவட்ட மட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான கிரிக்கட் சுற்றுப்போட்டி ஒன்று நாளைமறுதினம் புதன் கிழமை ரண்கிரி தம்புள்ள சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்ட அணி நாளை தம்புள்ளவிற்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. யாழ்.மாவட்ட அணி சார்பில் லூட்சன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), தலைமையில் உப தலைவர் எஸ்.விேனாத் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), அணி வீரர்களான எ.பிரசாத் (யாழ்.மத்திய கல்லூரி), ஆர்.ரஜீவன் (ஹாட்லிக் கல்லூரி), கே.நிஸாகரன் (ஸ்கந்தவரோதயா கல்லூரி), எஸ்.ஜனகன்ராஜ் (சென். பற்றிக்ஸ்), ரி.மயூரப்பிரியன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜ.ஜக்சன் (சென்.பற்றிக்ஸ்), எஸ். அற்சுன்ராஜ் (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்), கே.ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி), வி.விதுபாலா (சென்.பற்றிக்ஸ்), என்.பென்யோய் (யூனியன் கல்லூரி), ஜே.யதீஸ்வரன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), எம்.வயூகன் (யாழ்.இந்து), பி.நேசவர்மன் (பரியோவான் கல்லூரி) ஆகிய வீரர்களே மேற்படி போட்டியில் கலந்து கொள்ள செல்கின்றனர்.

இந்த வீரர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்றுமாலை 4 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த வீரர்கள் எதிர்வரும் முதலாம் திகதி திருகோணமலை மாவட்ட அணியுடனும், 2 ஆம் திகதி வவுனியா மாவட்ட அணியுடனும், 3 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அணியுடனும், 6 ஆம் திகதி மன்னார் மாவட்ட அணியுடனும் தம்புள்ள சர்வதேச விளையாட்டரங்கில் விளையாடவுள்ளார்கள் எனவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் இரவு 7 மணிக்கு முன்னர் மதுபானக் கடைகள் மூடப்படவேண்டும்!

## கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழு அறிவுறுத்தல்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து மதுபானச் சாலைகளும் இரவு ஏழுமணிக்கு முன்னர் மூடப்பட வேண்டும் என கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழு அறிவுறுத்தியுள்ளது.

மதுபானம் அருந்திவிட்டு இரவு வேளைகளில் சந்திகள், வீதிகளில் அட்டகாசம் புரிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது என்றும், அதிகளவான இளைஞர்கள் இரவுவேளைகளில் மதுபானக் கடைகளில் மது அருந்தும் பழக்கத்தில் ஈடுபட்டுவருவதை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கல்விச் சமூகத்தினரும், பொது அமைப்புக்களும் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மதுபானம் அருந்துபவர்கள் வாங்கிச்சென்று வீடுகளில் அருந்த வேண்டும் என்றும் -

இரவு ஏழுமணிக்கு பின்னர் மதுபான விற்பனை நிலையங்களைக் திறக்கக்கூடாது என்றும், திறப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வடமராட்சி கலாசாரத்தைப் பேணும் குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (14)

# சிரமதானம் செய்த குடும்பஸ்தர் மிதிவெடியில் சிக்கி காலிழப்பு!

சோரன்பற்றுப் பகுதியில் காணி துப்புரவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - சோரனபற்றைச் சேர்ந்த புண்ணியர் அம்பலவாணர் (வயது 48) என்பவரே தனது வலதுகாலை இழந்துள்ளார்.

தாளையடி - புதுக்காடு பிரதான வீதியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்த இந்தக் குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (21)

# சின்னஞ்சிறு செய்திகள்

### கலாவதி நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் 'கலாவதி நூல்' வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில், மாணவ மன்றத் தலைவர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

ஆசியுரையினை பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தியும், வெளியீட்டுரையினை செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் திருமதி சி.விசுவலிங்கமும் நிகழ்த்தினர். கலாசாலையின் அதிபர் நூலை வெளியிட்டு வைக்க, கவிஞர் சோ. பத்மநாதன் பெற்றுக்கொண்டார்.

ஆய்வுரையை இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன், சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். (91)

### கிருஷ்ணன் கோயில் தீர்த்த உற்சவம்

பச்சிலைப்பள்ளி மல்வில் கிருஷ்ணன் கோயில் வருடாந்த உற்சவம் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்று தேர்த்திருவிழா நடைபெற்றது. இன்று தீர்த்த உற்சவமும், நாளை பட்டுத்தீர்த்த உற்சவமும் இடம்பெறுகின்றன. (21)

### 25 லட்சம் ரூபா செலவில் புதிய நீர்த்தாங்கி

நீர்ப் வேலைத்திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரால் பளை நகர்ப்பகுதி மக்களுக்கு குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பளை பொதுச்சந்தையில் 25 லட்சம் ரூபா செலவில் புதிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றது.

இதுவரைகாலமும் பளை நகர்ப் பகுதியில் ஏற்பட்டிருந்த குடிநீர்ப் பற்றாக்குறை இதன்மூலம் ஓரளவு தீர்க்கப்படுமெனப் பிரதேசசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (14)

### யேசுராசாவின் 'தெரிதல்' 5 ஆவது இதழ் வெளிவந்தது

(கொக்குவில்)

அ.யேசுராசாவின் 'தெரிதல்' (ஆவணி/புரட்டாதி) 5 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

'பகிர்வு, படிப்பகம்' தகவற்களம் போன்ற வழமையான பகுதிகளுடன் 'பறைதல்', 'அவர்களும் நாங்களும்' ஆகிய புதிய அம்சங்களுடன் -

'தமிழ் இலக்கியப் பதிப்பு முன்னோடி' 'சுயபுத்தியை அவமதிக்கும் சமீபத்திய வரவு', 'புத்தக வாசல்வழி', 'ஜனரஞ்சகப் போலி எழுத்தாளர்கள்', 'பார்வை' உட்பட பல்வேறு ஆக்கங்களுடன் வெளிவந்து ள்ளது. (206)

### உள்ளூராட்சி நூலகருக்கு திறன் விருத்தி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சிமன்ற நூலகங்களில் கடமையாற்றும் நூலகர்களுக்கான விசேட திறன் விருத்திப் பயிற்சி வகுப்பு கடந்த 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

நூலகங்களிலுள்ள நூலகர்களின் திறன்களை அதிகரிக்கும் நோக்குடன், இந்தப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சி வகுப்பு யாழ். பொது நூலகத்தில் உள்ளூராட்சித் திணைக்களத்தால் தேசிய நூலக ஆவணப்படுத்தும் பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்பட்டுவருகின்றது. (14)

### அபிஷேக தினம்

(புலோலி)

புலோலி காந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த அபிஷேக தினம் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெற்று வருகிறது. இறுதிநாளான நாளை மறுதினம் மகா சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது. (14)

# வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா

(பருத்தித்துறை)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 13 ஆம் திகதி பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 17 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 27 ஆம் திகதி திங்கட்கிழமை 9.15 மணிக்கு தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 5 மணிக்கு சமுத்திர தீர்த்தமும், 29 ஆம் திகதி புதன் கிழமை 11 மணிக்கு கேணித் தீர்த்தமும் இடம்பெறும்.

உற்சவ காலப்பகுதியில் பகல் திருவிழா காலை 9.30 மணிக்கும், இரவுத்திருவிழா பிற்பகல் 3.45 மணிக்கும் ஆரம்பமாகும்.

உற்சவகாலத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

மஹோற்சவ காலங்களில் பருத்தித்துறையில் இருந்து மந்திகை ஊடாக வல்லிபுரக் கோயிலுக்கும், பருத்தித்துறையில் இருந்து கற்கோவளம் ஊடாக வல்லிபுரக் கோயிலுக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து வல்லிபுரக் கோயில் ஊடாக பருத்தித் துறைக்கும் இடையில் பஸ் சேவைகளை நடத்துவதற்கு எற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (20)

# 10 வருடத்துக்கு மேலாக திருத்தப்படாத வீதி!

மருதங்கேணி - நாகர்கோவில் வரையான பிரதான வீதி சுமார் 10 வருடத்துக்கு மேல் திருத்தப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியைத் திருத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கையாக வீதியின் இருமருங்கிலுமுள்ள காடுகள், பற்றைகள் புல்டோசர் மூலம் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு ஒரு வருடமாகியும் வீதியைத் திருத்துவதற்குரிய எந்தவொரு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

12 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி திருத்தப்பட்டால் செம்பியன் பற்று தெற்கு, வடக்கு, நெல்லியான், மாமுனை, குடாரப்பு வடக்கு, தெற்கு கிராமங்களில் வாழும் பொதுமக்கள் வியாபாரிகள், பாடசாலை மாணவர்களின் பிரயாணக் கஷ்டம் நீங்குவதுடன் வாகனங்களும் தாமதமின்றிப் பிரயாணத்தை மேற்கொள்ளமுடியும் என அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (21)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கண்காட்சி அண்மையில் நடைபெற்றபோது - சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கைலாயபிள்ளை மற்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் அங்கு வைக்கப்பட்ட பொருட்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (29)

# நாய்களுக்கு குடும்ப அட்டை வழங்க மானிப்பாய் பிரதேச சபை ஏற்பாடு

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினர் வளர்ப்பு நாய்களுக்கான குடும்ப அட்டைகளை விநியோகிக்கவுள்ளனர். நாய்களின் விபரங்களையும், தடுப்பூசி ஏற்றுவது தொடர்பான கால அட்டவணையுடன் இந்தக் குடும்ப உரிமை அட்டை தயாரிக்கப்பட்டுள்ளது.

50 ரூபா செலுத்தி பெறப்படும் இந்த அட்டையைத் தொலைத்தால் 100 ரூபா கட்டி புதிய அட்டையைப் பெறமுடியும் எனவும், அட்டைகளில் பதிவுசெய்யாது வளர்க்கப்படும் ஒவ்வொரு நாய்களுக்கும் தலா 1000 ரூபா குற்றப்பணம் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாய் உரிமையாளர்கள் பெயர், முகவரி, கிராமசேவையாளர் பிரிவு, நாய்களின் எண்ணிக்கை, வயது, நிறம் போன்ற விபரங்களுடன் தடுப்பூசி தொடர்பான கால அட்டவணையும் இணைக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதார பரிசோதகரும், வருமானவரி அதிகாரியும் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (91)

# மாடுகளுக்கு கால்வாய்நோய் கரவெட்டியில் பரவிவருகிறது

## சுகாதார பிரிவு எச்சரிக்கை

கரவெட்டிப் பகுதியில் மாடுகளுக்கு கால்வாய்நோய் பரவிவருவதாக பருத்தித்துறை கால்நடை வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துன்னாலை தெற்கு மற்றும் மேற்குப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கே கால்வாய் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இப்பகுதியில் வளர்ப்பு மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதை நிறுத்துமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் கால்வாய் நோய் பரவிவருவதை அடுத்து மாட்டிறைச்சி விற்பனைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தப் பகுதிகளில் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என்பன காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (14)

### துர்நாற்றம் வீசும் கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இந்துக்கல்லூரிச் சந்திக்குத் தெற்காக உள்ள வெற்றுக்காணி ஒன்றுக்கு முன்னால் கழிவுகள் கொட்டப்படுவதால் இந்த வீதியால் பயணஞ் செய்யும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தக் காணியில் முன்னரும் கழிவுகள் கொட்டப்பட்டு வந்ததை அறிந்து மாநகரசபையினரால் கழிவுகள் அகற்றப்பட்டிருந்தன.

மீண்டும் இந்தப் பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதனால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால், அந்த வீதியால் செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (63)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : செ.அபிநயா
முகவரி : மானிப்பாய்

நான்காவது அகவையில்



பெயர் : ந.பாருஜன்
முகவரி : மல்லாகம் கிழக்கு மல்லாகம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.





நவாலி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பல்துறை அறிஞர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவுதினத்தின்போது - அவரது சிலையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அம்மாவும் கடலும்





சிறுகதை

மனோகரன் அவ்வாறு சத்தமிட்டது எல்லோரையும் ஒருகணம் உலுப்பியது. ஆங்காங்கே வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினர்கூட அவ்விடத்துக்கு ஓடி வந்து விட்டனர். மனோகரன் சற்றும் தாமதியாது தன் வீட்டை நோக்கிப் போகும்போதே அவ்வாறு சத்தமிட்டான்.

மனோகரன் பிறந்து வளர்ந்தது இந்த ஊர்தான். ஆனாலும், அவன் இந்த ஊரைவிட்டு வெளிநாடு சென்று 20 வருடங்களாகி விட்டன. அன்று சென்றவன் கடந்த மாதம்தான் மீண்டும் சொந்த மண்ணில் காலடி வைத்தான். திடீரெனக் கிடைத்த தாயின் மரணச் செய்தியால் துன்பமடைந்த மனோகரன் தாய்நாடுவருவதை நாளை, நாளை என்று பிற்போட்டுவந்த செயற்பாட்டை உடனடியாகவே செய்யவேண்டிய தாயிற்று.

தொலைபேசி மூலம் கிடைத்த செய்தி அவனை ஒரு முறை உலுக்கியது. உடனடியாகவே தெரிந்த நண்பன் ஒருவனின் உதவியுடன் இலங்கை வருவதற்கான விமான 'ரிக்கெற்றை' ஒழுங்கு செய்து, மறுநாள் காலையிலேயே கொழும்பை வந்தடைந்தான்.

மனோகரனது தேவையை அறிந்து செயற்பட்ட நண்பனின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்துக்கு உடனடியாகவே விமானத்தில் வந்து சேர்ந்தான்.

மனோகரன், தினமும் கடலுக்குச் சென்று மீன்பிடித்து சீவியம் நடத்தும் ஏழைக் குடும்பத்தின் மகன் இவனுக்கு ஒரு தங்கை.

நாட்டுப் பிரச்சினை ஊரை விட்டுக் கலைக்க, வெளிநாட்டில் இருந்த உறவினர் ஒருவரின் உதவியால் இவனும் வெளிநாடு சென்றான். தாய், தங்கை இவர்களை விட்டுப் பிரிய மனமில்லையானாலும், தாயைக் காப்பாற்ற வேண்டும், தங்கையை நல்லபடி வாழவைக்க வேண்டும் என்பதற்காக மிக மனக் கஸ்ரத்துடனும், பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் வெளிநாடு போய்ச் சேர்ந்தான். 25 வருடங்களுக்குமுன் கடலுக்குத் தொழிலுக்குச் சென்ற தந்தையை இழந்த பின்னர் அவனுக்குத் தன் குடும்பத்தைக் காக்கவேண்டும் என்ற மன உறுதி காரணமாக சிறு வயதிலேயே உழைக்கச் சென்றவன் இவன்.

நீண்ட காலத்தின்பின் வீடுவந்து தாயோடு இன்பமாகப்பேசி மகிழ வேண்டும், திருமணம் முடித்துப் பிள்ளைகளோடு வாழும் தன் தங்கையின் மகிழ்வான வாழ்வை ரசிக்க வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டவன், அழுகையோடு மீண்டும் ஊருக்குவந்து தாயின் இறுதிக் கடன்களைச் சிறப்பாகச் செய்கிறான்.

"வடிவா அம்மாவுக்கு செலவுகளைச் செய்ய வேணும்......."

என்று சொல்லி 31 ஆம் நாள் அந்தியேட்டியையும் ஊரையே கூட்டி மேளதாளத்துடன் மிக விமர்சையாக ஏற்பாடு செய்தான். தேர் கட்டி "தாயின் உடற்சாம்பல், கல்லு" என்பவற்றைக் கடலில் கரைப்பதற்காக வீட்டிலிருந்து ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் எடுத்துச் செல்லும் போதுதான் அது நடந்தது. ஊர்க் கடற்கரையில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் கடற்கரைக்கு ஊர்வலமாகச் செல்லவிடாது தடுத்தனர். கடற் கரைக்குச் செல்வதாக இருந்தால் இராணுவக் காவலரணில் அடையாள அட்டையைக் கொடுத்துவிட்டுத்தான் கடற்கரைக்குப் போகவேண்டும். ஆனால், தாயின் சாம்பல் தாய் பிறந்து, வளர்ந்து வாழ்ந்த கடற் கரையில் கரையவேண்டும் என்று தாயின் நினைவோடு நின்ற மனோகரன், தனது அடையாள அட்டையை எடுத்துவரவில்லை. தாயின் இந்த அந்தியேட்டி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவரிடமும் அடையாள அட்டை இருப்பதால் அவர்களைக் கடற்கரைக்குச் செல்ல அனுமதித்த படையினர் மனோகரனை மட்டும் கடற்கரைக்குப் போகவிடாது தடுத்தனர்.

ஊரில் உள்ள பெரியவர்கள், காவலரணில் இருந்த படையினர் முதல் உள்ளே இருந்த அந்த முகாம் பொறுப்பதிகாரிவரை அனைவரிடமும் நிலைமையை விளக்கிய போதும், அடையாள அட்டையின்றி கடற்கரைக்குச் செல்லமுடியாது என மனிதாபிமானமற்ற முறையில் மறுத்துவிட்டனர்.

தனது கடற்கரையில் தன் தாயின் இறுதிக் கடன் செய்ய இத்தனை தடைகளா? என்று மனோகரன் மனம் நொந்து படையினர் முன் அழுது கெஞ்சினான். அவர்கள் மறுத்துவிடவே அவனுக்கு ஆத்திரம் தான் வந்தது. ஆனால், ஊரில் இருந்த மூத்தவர்களோ, இவனை இவ்விடத்தில் நிற்குமாறும், தாம் கடமைகளைச் செய்துவிட்டுக் கடற்தண்ணீர் அள்ளிவந்து குளிப்பாட்டி விடுவதாகவும் ஆலோசனை கூறினார்.

தாயின் சகோதரன் முறையான ஒருவர்

"ஓம் தம்பி சாம்பலை என்னட்ட தா நான் போட்டு, தோஞ்சிட்டு வாறன்" என்றார்.

"இல்லை அம்மாவின்ரை சாம்பல் கரையுற கடல்ல நானும் தாண்டு தோயவேணும்........ அப்பதான் என்ர மனம் ஆறுதல் அடையும்........" என்று மறுக்க.

எல்லோரும் சேர்ந்து இவனுக்கு ஆலோசனை சொல்ல, காவலரண் அருகில் இருத்திவிட்டுப் போகமுற்பட்ட போதுதான், மனோகரன் தாயின் உடற்சாம்பல் வைக்கப்பட்ட போத்திலைக் கொடாது மறுத்தான். இராணுவத்தினரின் கெடுபிடியால் மனம் நொந்துபோயிருந்த மனோவுக்கு இவர்களின் செயற்பாடு ஆத்திரத்தை ஊட்டவே

"தேரை கடலுக்கை விட்டுட்டு வாங்கோ

நான் போறன்.........." என்று வீட்டைநோக்கிப் புறப்பட்டான்.

"தம்பி, தம்பி சாம்பலைத் தா......" என்று எல்லோரும் கேட்க "இல்லை அதை நான் கரைக்கிறன்........" என்றான்.

அதற்கு மற்றவர்கள் மறுத்து "இல்லைத்தம்பி.......... இப்பவே கரைக்கவேணும்.........." என்று பல காரணங்கள் சொல்லி அதனை வாங்க முற்பட்டபோதுதான் அவன்

"அம்மாவின்ரை கடலுக்க நான் தான் அம்மான்ரை சாம்பலைக் கொட்டவேணும். என்ர கடலுக்கு அடையாள அட்டை காட்டாம நான் போகிறவரைக்கும் இது என்னோடையே கிடக்கட்டும்."

என்று கூறிப் பலத்தகுரலில் "நீங்கள் போங்கோ.......... நான் வர மாட்டன்"

என்று கத்தியவன் ஆத்திர மிகுதியால் "சீ....... இப்பிடியும் எங்கட கடலுக்குப்போக வேணுமே. மானம் கெட்ட சீவியம்........." நான் போற காலத்திலை இதைக் கரைப்பன் அப்ப எனக்கு அடையாள அட்டை தேவையில்லை என்று நினைத்தவாறு தாயின் சாம்பல் உள்ள போத்தலோடு வீட்டைநோக்கி நடக்கிறான்.

**- சோ.சி.கலைக்கதிர்.**

# ஒரு கவிஞன் உள்ளத்திலிருந்து...

சிந்தனைத் துளிகளைத் திரட்டி சிறப்புமிக்க.... சொற்கோர்வைகளாக்கி உணர்வுள்ள...... துடிப்புமிக்க....... அனுபவக் காயங்களை கவிதைகளாக வடிப்பதென்பது யாவராலும் இயலுமானதொன்றல்ல, அது மொழிப்பற்று, இலக்கிய நுகரல், சமூக ஐதார்த்த சிந்தனை போன்றவற்றிற்கிடையிலான கலைத்தள அர்ப்பணிப்பு.

ஆனால், என்னைப் பொறுத்த மட்டில் என் கவிதைகள் என் வாழக்கையின் பலவீனம் என்பேன். ஏனெனில் இலக்கியந் தேறாத என் கவிதைகளிற்குள் என் எண்ணச் சிக்கனம் சுகமானதாய் இல்லை. அனுபவ வலிகள் தான் என்னை எழுதத் தூண்டியது. கண்ணீரைக் கைக்குட்டையில் சேமிக்கத் தெரிந்த என் தனிமையிலும் உறவாய் துணை நிற்பது என் கவிதை.

பலரது விருப்பு வெறுப்புக்களைக் கடந்து
பிறந்தது - என் கவிதை
அதன் பிரசவங்களை ஏந்தி
விமர்சிக்க உறவுகளில்லாத
கருக்குழந்தை - என் கவிதை

இலக்கியம் சமூகத்தை திருத்தமுயலலாம். அதே கூற்றை ஒரு சமூகம் கவிதையின் பால் செய்ய முனைவது தவறு. அவற்றுக்கெல்லாம் என் கவிதைகள் தப்பவேண்டும். அவை என் அம்மாவாய்....... அப்பாவாய்...... நெருங்கிய உறவுகளாய்........ உறவாடி நிற்பவை. சமூக வாஞ்சைமிக்கதுதான் என் கவிதை. என் வாழ்வின் ரணங்கள் ஏராளமே.....! ஓரளவே என்னால் சிந்திக்க முடிகின்றது. ஆனால், சிறிதளவே கவிதையாக எழுத முடிகிறது. ஏனையவை என் அடிமனதில் அடைப்பட்டுக் கிடக்கின்றன.

கவிஞையாக, எழுத்தாளியாக ஆசைப்பட்ட முயற்சிகளைச் சூழ்நிலைகள் விழுங்கிக் கொண்டதனால், சந்தர்ப்பவாத கவிச் சிசுவாக தவழ்ந்து கொண்டிருப்பேன். சொல் அழுத்தம் மட்டும் தொனிக்கும் புதுக்கவிதைகள் வரிசையில் என் கவிதையும் உயிர் வாழும்.........!

நான் உள்ளவரையேனும்........!
என் எதிர்பார்ப்பின் பிரசவிப்புக்களை
வழிநடத்த ஒரு கலை நெஞ்சம் சோபனமாகாதா........?
என்ன........?

நன்றி,
அனுபவங்கள்.

# அவசரமான வேகம்

ஓடிக்கொண்டிருக்கும் வேகத்தில் என்னைத் தெரியவில்லை யாருக்கும். தாண்டிக்குளத்தில் இருந்து முகமாலை வரை வரலாற்றுப் பதிவுகளாகக் காணப்படும் பிர தேசங்களாகும். இந்த வழியே வந்துபோகும் போது அவசரமான வேகம்தான் கூடுதலாகக் காணப்படும்.

நீ முந்தி, நான் முந்தி என்று புதியவகை மோட்டார் சைக்கிள்களும், பெரிய வாகனங்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் பாதை மூடிவிடமுதல் யாழ்ப்பாணத்தில் இருந்து போகின்றவர்கள் முகமாலையைத் தாண்டிவிடவேண்டும். வவுனியாவில் இருந்து வருகின்றவர்கள் ஓமந்தையைத் தாண்டிவிடவேண்டும். இந்தப் பரபரப்பான வேகத்தில். அந்த ஆனையிறவுப் பாதைவழியே மக்கள் கூட்டம், நானும் அந்த வழியே வந்து கொண்டிருக்கிறேன். அதே வேகத்தில் எனக்குப் பக்கத்தில் வந்த ஒருவர், எங்கே போகின்றீர்கள் என்று கேட்க யாழ்ப்பாணம்தான் என்று சொல்லிவிட்டு நீங்கள்! என்று பதிலுக்கு நானும் கேட்க, யாழ்ப்பாணம் தான் என்றார். விடுப்புக் கதைகளைக் கதைத்துக்கொண்டு நகர்ந்தோம்.

அவர் மேலும் தொடர்ந்தார். யாழ்ப்பாணம் 1995 ஆம் ஆண்டுக்கு முதல் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அப்பொழுதெல்லாம் நல்ல தமிழ் கலாசார, பண்பாடான சூழல் காணப்பட்டது. இப்பொழுது பயப பீதியுடன் வீதியில் செல்வதும், வீட்டுக்குள் இருப்பதும் வழக்கமாகிவிட்டது. இந்த நிலை மாறவேண்டும்.

மக்கள் துணிந்தால், ஒன்றாக இணைந்தால் பிரச்சினையெல்லாம் நீண்டு செல்ல வழிவகுக்காது. இவர்களிட்டைப் பயந்து பயந்து சிரித்துப்பேசி எத்தனை நாளுக்குத் தான் இப்படி உணர்வில்லாத உடல்போல் வாழ்வது, என்று மிகவும் மனவருத்தத்துடனும், ஆதங்கத் துடனும் தனது கருத்தினை வெளிப்படுத்தினார்.

இதுவரையில் நான் எதுவும் பேசாமல் வந்துகொண்டிருந்தேன். இப்படிப்பட்ட ஒருவருடன் பேசிவரும்போது நான் என்னத்தைக் கதைப்பது, அவரே எல்லாவற்றையும் பேசிவிட்டார்.

முகமாலையை அண்மித்ததும் அந்த ஆள் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, இறங்கித் தனது பையினைத் திறந்து ஏதோ எடுத்தார் - நானும் மோட்டார் சைக்கிளினை ஓரமாக நிறுத்தி விட்டு அவர் அருகே சென்றேன். அங்கே அவர் இரண்டு புத்தகங்களை எடுத்து ஒரு பற்றைக்குள் வீசி எறிய, முற்பட்ட பட்டபோது நான் குறுக்கிட்டேன், அண்ணை... கொஞ்சம் நில்லுங்கோ என்ன புத்தகம் இது ஏன் எறியப்பார்க்கின்றீர்கள்? என்றதும் இந்தப் புத்தகம் இரண்டும் களத்தில் நின்று போராடிய வீரர்கள் எழுதிய புத்தகங்கள் ஆகும். இதைக் கொண்டு [illegible] இராணுவம் பார்த்தால் என்ன ஆகும். அதுதான் என்றார்.

அந்தப் புத்தகங்களை என்னிடம் தாங்கோ என்றேன். எதுவித சலனமும் இன்றித் தந்துவிட்டுப் பதில் ஒன்றும் சொல்லாமல் நகர்ந்து சென்றுவிட்டார். முகமாலை சோதனைச் சாவடியில் இராணுவம் என்னைப் பரிசோதனை செய்தபோது என்ன புத்தகம் என்று சிங்களத்தில் கேட்டான். கதைப்புத்தகம் என்று தமிழில்



நான் சொன்னேன். ஆமிக்கு என்ன விளங்கியதோ தெரியவில்லை, சரி என்று சொல்லிவிட்டான்.

மோட்டார் சைக்கிளினை எடுத்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தேன். கொடிகாமத்தில் ஓரமாக ஒருவர் நின்று என்னை வழிமறித்தார். யார் என்று பார்த்தால் அதே ஆள்தான். அந்தப் புத்தகங்கள் எங்கே என்றார் நான் அதை எடுத்துக் கொடுக்கமுதல் என்கையில் இருந்து பறித்தார்.

இன்னுமொருதடவை எறியவேண்டிவரும். எறிந்து விடாதீகள் என்று நான் சொல்ல, அதைக்கேட்காமல் ஆமி ஒன்றும் கேட்கவில்லையா என்று என்னிடம் கேட்டுவிட்டு என்னுடைய பதிலினை எதிர்பாராமல் அவசரமாகச் சென்று விட்டார். என்னுடன் கூடவே வந்து கொண்டிருந்த நண்பன் கிரி சொன்னான் இந்த ஏ-9 வீதியில் இப்படிப்பட்டவர்கள் நிறையப்பேரினை நான் பார்த்திருக்கின்றேன் என்றான்.

- செல்வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அகம்



ஈழத்தமிழர்கள் மேற்கு உலகெங்கும் சிதறிவாழ்கின்ற இந்த நிலையில், புலம்பெயர் இலக்கியம் தனக்கென ஓரிடத்தைத் தக்கவைத்திருக்கிறது. இந்த வகையிலே டென்மார்க்கில் வாழும் கவிஞர் பொன்னண்ணாவின் இரு கவிதைத் தொகுப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. நெஞ்சத்து நெருப்பு, உளிகள் இவை தொகுப்புக்களின் பெயர்கள். ஏற்கனவே ஐந்து தொகுதிகளை வெளியிட்டிருக்கும் கவிஞரது 'நெஞ்சத்து நெருப்பு' ஆறாவது தொகுதியாகவும், 'உளிகள' என்னும் மின் பாக்களது தொகுப்பு ஏழாவது தொகுப்பாகவும் வெளிவந்திருக்கிறது.

புலம்பெயர் நிலையில் ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்படும் தாய்மண் குறித்தான ஏக்கம், கவிதைகள் பூராவும் விரவிக்கிடக்கிறது. எதுவுமே செய்யமுடியாமல் தாய் மண்ணை விட்டுப் பிரிந்தாலும், அந்தத் தாய் மண்ணை மீட்பதற்கான போரில் புலம்பெயர் தமிழன் ஒவ்வொருவனுக்கும் இருக்கும் ஆர்வத்தைக் கவிதையெங்கும் காணமுடிகிறது. அரசியல் தலைமைத்துவத்தின் போலி முகமூடிகள் கிழிக்கப்படுகின்றன. சமாதானம் பற்றிய எதிர்பார்ப்புகள் ஒவ்வொரு தடவையும் பொசுங்கிப் போவதையும் கவிஞரது பேனா பதிவுசெய்யத் தவறவில்லை.

ஈழத்தமிழர் வாழ்வில் தவிர்க்க முடியாத அம்சமாகப் போரும், அதன் விளைவான புலம்பெயர்தலும், ஆகிவிட்டபின் அவையே கவிஞரது படைப்புக்களுள் முக்கியத்துவம் பெறுகின்றன. இருந்தும் மேலை நாடொன்றில் இருந்துகொண்டே தாய் மண் மீட்புக்காகப் பரணி பாட முடிகிறது கவிஞரால். இந்த மண்ணின் வீரவித்துகளுக்கான போர்ப்பரணி கவிதையெங்கும் பீறிட்டு வருகிறது.

இவைதவிர சமூக அவலங்களைத் தொட்டுக் காட்டுகின்றார் கவிஞர். முதிர்கன்னிகளின் பிரச்சினை, அதன் விளைவாய் வயோதிபர்களுக்கு இளம் பெண்கள் இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப்படவேண்டிவரல் என்று இவரது பார்வை சமூகத்தைச் சுட்டிநிற்கிறது. மற்றும் ஆங்கில மோகத்தால் எம் தமிழர், நம் தமிழை மறந்துபோவது பற்றியும் வேதனைப் படுகின்றார் கவிஞர். சின்னத்திரை மயக்கத்தில் மூழ்கியிருக்கும் எம்மவரின் அறியாமையையும் கவிதைகள் தொட்டுச்செல்கின்றன.

நெஞ்சத்து நெருப்பு தொகுதியில் ஒரு கவிதை இப்படிச் சொல்கிறது.

சாகப்போகின்றவர்கள் அப்பாவி மக்களும்
இரு நாட்டுப் படைகளும்தான்!
நீயோ, அவனோ அல்ல.
மரணத்தை எதிர்பார்த்து வாழாத இவர்கள்
உன் ஆணவத்தால், உன் பிடிவாதத்தால்
மரணிக்கப் போகின்றார்கள்!
உனக்குள் இருளில் இருக்கும் அந்த
நான் என்ற கொடிய மிருக அரக்கன்
உனக்குள் உள்ளவரை - நீ எப்படி
எப்போது மனிதனாகப் போகிறாய்.......?

கவிஞரது இந்தக் கேள்விக்கு ஒவ்வொருவனும் நேர்மையாய்ப் பதில் சொல்லும் வரை இந்த உலகமெங்கும் போர் நடந்துகொண்டுதான் இருக்கும்.

போர் நடந்துகொண்டிருந்தாலும், நாட்டில் அவ்வப்போது தேர்தல் திருவிழா வந்துகொண்டுதானிருக்கிறது. அப்போதெல்லாம் எதிர்பார்க்காதவை நடந்து விடுகின்றன. அத்தகைய அதிர்ச்சியொன்றைத் தன் மின்பாவிலே இப்படிப் பதிவு செய்றிறார் கவிஞர்.

செத்துப் போனவன்
எழுந்து வருவான்
தேர்தல் நாளில்!



அடுத்தது - உளிகள்...... தலைப்புக்கேற்றபடி தன் பேனா, உளியால் சின்னச் சின்னக் கவிதைச் சிற்பங்களைச் செதுக்கியிருக்கிறார் கவிஞர்.

கொட்டிய பூவாய்...
தட்டிய பாலால்...
சமாதானப் பேச்சு.
என்று சமாதானம் பற்றியும்
ஏழைக்குமரியின் அழுக்குப் பாவாடை
கிழியல் ஓட்டை
பணக்காரனுக்கு வானத்து நட்சத்திரம்

என்று சமூகக் கொடுமை பற்றியும் கவிதைகள் அழகாகப் பதிவு செய்கின்றன.

மனதைப் பட்டென்று தொட்டுவிடும் கவிதையாக இந்தக் கவிதை
செட்டை இருந்தால் பறந்தவிடலாம்.
கூட்டுப்புழு சொன்னது.
சத்தம் போட்டுச் சிரித்தது கூண்டுக்கிளி
இந்த மூன்றுவரி என்னமாய் மனதை அதிரவைக்கிறது.

நிறையக் கவிதைகளை எழுதுவதால் ஏற்படும் பலவீனமாக ஒரே மாதிரியான கற்பனைகள் பல கவிதைகளில் படிந்து விடுவதைச் சுட்டலாம். கவிஞரது கவிதைகளும், அந்தப் பலவீனத்தால் சற்றே சிக்கிவிட்டாற் போலிருக்கிறது. உதாரணத்துக்கு தேசியக் கொடியை எரித்து, கட்சிக் கொடிக்கு வர்ணம் பூசுகின்ற கற்பனையைத் தொடர்ந்து சில கவிதைகளில் காணக்கூடியதாகவிருக்கிறது.

எவ்வாறெனினும், புலம்பெயர் தேசத்திலிருந்து கொண்டு தன் தமிழுணர்வுகளைக் கவிதைகளாக்கியிருக்கும் கவிஞர் பொன்னண்ணாவிடமிருந்து புலம்பெயர் இலக்கியம் இன்னும் எதிர்பார்க்கின்றது.

- தட்சாயணி.

# ஓர வஞ்சகமான சட்டங்களிலிருந்து மீட்சிபெற பெண் துணிந்துவிட்டாள்

சினிமா, மொடலிங், நாடகம் மற்றும் ஏனைய பொழுதுபோக்குகள் முதலான துறைகள் கலை சார்ந்த துறைகளாக விருத்தியுறுவதிலும், அதாவது கலைப் பெறுமானத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதிலும் பார்க்க தசை சார்ந்த விரச விபச்சாரப் பண்புகளை நோக்கிய தளத்தில் இயங்குவதும் உணரக்கூடியதாக உள்ளது.

இதற்குத் தனியே இத்துறை சார்ந்தவர்களை மட்டும் குறைகூறுவது போதுமானதல்ல. இது குறித்து ரசிகர்களின் எதிர்பார்ப்பும் இதுவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஒருவருக்கு இயல்பாகவே எழும் எதிர்ப்பாலார் மீதான இரசனையையும், கலைக்கூறாகக்கொள்வது இறுக்கமான பண்பாட்டு உணர்வாளர்களால் மறுக்கப்படலாம். ஆனால் நீண்டகால நிதர்சனமாக இதுவே நிகழ்கின்றது. 'தடித்த பொன் முலைத்தடம் கடந்து அருவி போய்த்தாள' என்ற வர்னனை முதல் இராவணன் சீதையைச் சந்திக்க அசோகவனத்துக்கு வரும்போது அவன் அணிந்திருந்த மாலையிலிருந்து உதிரும் மலர்களினை புணர்ச்சியின் பின் சோர்ந்து கிடக்கும் விபச்சாரிக்கு ஒப்பிட்டது வரையிலான பல்வேறு உதாரணங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இத்தகைய வரிகளை எல்லாம் கலையுணர்வுமிக்கது என்று யாரும் சொல்லிவிட முடியாது.

இலக்கியத்தை விற்பனைப் பொருட்களாக்க பெண்ணையும், பெண்குறித்த வர்னணையையும் பயன்படுத்திய உத்தி என்பதுவே இதற்கு மிகப்பொருத்தம். இக்காலச் சினிமாவின் மசாலாக் கூத்தையும் இத்தகைய வர்னணையையும் ஒரே தராசில் இரு தட்டுக்களில் சமப்படுத்தலாம்.

மறுபுறத்தில் இயல்பான வாழ்வியலில் பாலியலும் எதிர்ப்பால் உணர்வும் முக்கியத்துவம் பெறுவதால், கலை இலக்கியங்களில் அவற்றை எவ்வாறு தவிர்ப்பது என்ற சூடான வினா எழத்தான் செய்கின்றது.

ஆனால், இரசனை என்பது உள்ளார்ந்த ஆர்வம். இதனைக் கலையுணர்வு குறித்த தளத்திலிருந்து தசை விரசத்திற்குத் தடம் புரட்டி விடுவது ஆரோக்கியமானதல்ல.

சரி சமூக இலங்கியங்கள் தான் இப்படி என்றால் கட்டுக்கோப்புக்ளையே வரையறுக்கும் சமய இலக்கியங்களும் இதனை செய்திருக்கின்றது. தேவதாசி கந்தருவப்பெண் தேவலோக அரம்பை என்று வர்னித்து போதாமல் அரக்கி பேய்ப்பெண் என்று நீண்டு செல்லும் பாத்திரங்களுக்கு தசை அழகு வர்ணிப்பது தவிர, காத்திரமான இலக்கிய முக்கியத்துவம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

அத்தகைய வர்ணிப்பையும் பாத்திர அலங்காரத்தையும் தவிர்த்தே கதையை நகர்த்தியிருக்கலாம் போலவும் படுகின்றது. பெண்ணைத் தனியே போதைப்பொருளாக நினைத்து ஆக்கும் படைப்புகள் அதிகப்படியான விற்பனையையும் பிரபல்யங்களையும் பெற்றுக்கொள்ளும் என்ற கருத்தே இத்தகைய பாத்திரங்கள் ஊடாகத் தேவைப்படுகின்றது.

அதிலும் வாசகர்களை முழுதாக ஆண்களாகக் கருதிக்கொண்டு, படைக்கப்படும் இலக்கியங்களில் பெண், தாய், சகோதரி என்ற உறவு நிலைகளைக் கடந்து ஆணைத்தூண்டல் பேறடையச் செய்யும் ஒரு கூறாகவே காட்டப்படுகின்றாள். இந்தக் காட்சி நிலையிலிருந்து மீளமுடியாத அளவுக்கு சமூக இறுக்கத்தைத் தக்கவைத்தது தவிர வேறு எதனையும் இத்தகைய பண்பாடுகளால் அடைய முடிவதில்லை.

இவை தவிர சமூகத்திற்குப் போதனை வழங்கும் சமூக சீர்திருத்தக் கருவிகளாகத் தம்மை இனங்காட்டிக்கொள்ளும் கிராமிய நிகழ்வுக் கலைகள்கூட, பெண்ணைத் தன்போக்கில் வகைப்படுத்திக் கொள்வதும் வசைப்பாடிக்கொள்வதும் முட்டாட தனத்துடன் கூடிய பிற்போக்காகவே கொள்ளக்கூடியது.

சிறுவயதில் என்னை மிகப்பாதித்த காத்தவராயன் கூத்தில் ஆரியப் பூ மாலையைப் பற்றிய ஒரு பாட்டில்....

*கொண்டை பெருத்தவளுடா மகனே!*
*பெருத்தவளுடா*
*அவள் குடிவழிக்கு ஆகாதுடா மகனே!*
*ஆகாதுடா*
*கூந்தல் பெருத்தவளுடா மகனே!*
*பெருத்தவளுடா....*

என்று நீண்டு செல்லும் பாடல் நச்சு வந்தைகளைச் சமுதாயத்தில் தூவுவன. பெண குறித்த இந்த அளவீடு ஆதாரமின்றிய ஒரு அடக்கு முறையாக, சமூக அநீதியாகவே அமைகிறது. பெண் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுவதிலும் பார்க்க, குற்றம் செய்துவிடுவாளோ என்ற அச்சம் காரணமாகத் தண்டிக்கப்படும் சமூக சட்டங்களே அனேகம். இத்தகைய சமுதாய மாறாட்டம் வக்கிரத்தையே விளைவிக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆண் எதிர்ப்பு வாதமாக வரும் தஸ்லிமா நஸ்லிமின் கவிதையைக் கவனிப்பது பொருத்தமென நினைக்கிறேன்.

*நான் ஒரு ஆணை வாங்க*
*விரும்புகிறேன்*
*சுத்தமான உடை சவரம் செய்தமுகம்*
*வாரிய தலைமுடி*
*அவன் – பூங்கா இருக்கையில்*
*இருக்கிறான்*
*தடவைக்கு*
*ஐந்து அல்லது பத்து டக்கா*
*எனும்*
*மலிவான விலையில்*
*அவனை நான் வாங்குவேன்.*

என்று தொடங்கி தன் ஆண் வக்கிரத்தை எல்லாம் கொட்டியபின் –

பின் அவனை. நான் அழிப்பேன்.

என்று முடிக்கிறார். இத்தைகைய வெறுப்பின் அத்திவாரம் என்ன? சமூகத்தின் அந்தச் செயலுக்கு இந்தப் பதில்? என்பவற்றை நாம் ஊன்றி நோக்கவேண்டும்.

ஒட்டுமொத்தமான சடத்துவ இருப்பை பெண் ஏற்றுக்கொள்ளவில்லை. தனக்காக தன்னை நிலை நிறுத்தவும் நிர்ணயம் செய்யவும் சமூகத்தின் ஓர வஞ்சமான சட்டங்களிலிருந்து மீட்புப் பெறவும் அவள் துணிந்துவிட்டாள் என்பதுவே இத்தகைய எழுச்சிகளின் அறிவிப்பாகும். சமூக சமத்துவம் நோக்கிப் பண்படுத்தப்படாதவரை, ஆணாதிக்க சிந்தனை அறுபடாவரை, பால்நிலை வக்கிரம் சீர்படுத்தப்படாதவரை இந்நிலைப்பாடு பெண்களின் மனநிலையில தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

# இலக்கிய முத்து

செய்ந்நன்றி அறிதல் என்கின்ற உயரிய பண்புக்கு இலக்கணம் சமைத்தவர்கள் தமிழ் மறவர்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செய்ந்நன்றியறிதல் என்கின்ற செம்மை சான்ற பண்புக்கு ஆவியும் துறந்த அருந்தமிழ் மறவர்கள் பலர் உள்ளனர்.



'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்கின்ற வள்ளுவன் தன் வாக்குக்கு அணியாக அமைந்தவன் மானவீரன் கும்பகர்ணன்.

மிதிலை மகளை இலங்கையர் கோன் கவர்ந்து வந்து, இலங்கா புரியிலே சிறைவைத்துவிடுகின்றான். அதை அறிந்த கும்பகர்ணன் தன் தமயன் தகாத செயல் செய்யத் துணிந்தான் என்றுணர்ந்து அவனுக்கு அறிவுரை வழங்குகின்றான். பிறன்மனை நயத்தல் பேதைமையிலும் பேதைமை என தம்பி இடித்துரைத்த போதும் இராவணன் கேட்கத் தயாரில்லை.

## மானவீரன்

தன் தமையன் தகாத செயல் செய்து பழிதேடினான் என்பதையும், இணையற்ற இராமபிரான் கணைகளால்தான் ஆவி துறப்பது திண்ணம் என உணர்ந்தும், அன்னமூட்டிய அண்ணனுக்காக அமர்க்களம் செல்கின்றான்.

போர்க்களத்தில் கும்பகர்னனைக் கண்ட இராவணன் அறநெறியினை ஆதரிக்கும் அவன் நீர்மையை விபீஷணன் மூலம் அறிந்து, அவனைத் தன்பக்கம் ஈர்க்க விபீஷணனை அனுப்புகின்றான்.

அமர்க்களத்திலே தன் அண்ணன் கும்பகர்ணனைச் சந்தித்த விபீஷணன் அறநெறி துறந்த இராவணனை நீங்கி, அறநெறிசார் இராமனை அடையும்படியும், இராமன் தனக்கீந்த எண்ணற்ற செல்வத்தை கும்பகர்னனுக்குத் தருவதாகவும் தெரிவிக்கிறான்.

அவ்வாறு கூறிய விபீஷனை நோக்கி ஐய, நீரிற் குமிழிபோல் நிலையற்றதாகிய இந்த உலக வாழ்வினை விரும்பி அன்னமூட்டி வளர்த்த அண்ணன் செய்த பெரு நன்றியை மறப்பேனா? பன்னாட் போற்றி வளர்த்துப் போர்க்கோலம் புனைந்தனுப்பிய என் அண்ணனுக்குத் துரோகம் செய்து, அவன் உயிரைப் பறிக்கத் துணியும் மாற்றானைப் பணிந்து போற்றி, பதவிபெற்று வாழ்தல் எனக்கு ஏற்றதன்று. அண்ணனுக்காக அமர்க்களம் சென்று ஆவி துறப்பதே எனக்கு இனிப்புகழும், பெருமையும் எனக்கூறி செருக்களம் சென்று ஆவிதுறக்கின்றான் மானவீரன்.

"செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரியல் எம்முன்
உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட
புண்ணுடை நெடுசோடு ஐய
கும்பிட்டு வாழ்கிலேன் யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்"

- லெஸ்லி.

# புலம்பல்

யாரும் இல்லா அனாதையாய்
வெறுமையாகிப் போன வாழ்வு

மௌனத்தின் குழைவில்
மனவெளியில்
வேதனைத் துயர் கலந்த சோகராகம்.

இருளின் ஆட்சியினூடே நிமிர்கிறேன்
பாலைவனமாகிப் போனவாழ்வும்
வசந்தமும்

இராப் பொழுதில்
இராக்குருவியின் சத்தம்
காதோரம் தொட்டுச் செல்கிறது

விடிகாலைப் பொழுதினிலே
யார்வீட்டில் சா - ஒலியோ
கேள்வியாய் பிறந்திடும் உணர்வு

இப்போதெல்லாம் நிறம்மாறும் மனிதம்
புலம்பலிலே தெரியும் நடிப்புகள்.

புன்னகையினூடே புழுங்கும் மனமுடன்
பட்டமரமாகிப் போன என்வாழ்வின்
கால ஓட்டம்

ஆலமரத்தடி சுந்தரண்ணையின்
காத்தவராயன்
சத்தியவான் சாவித்திரி என
ஓங்கி ஒலித்திடும்
இன்னிசை கானத்தின் சுகம்

முடிந்து போனஇருள் வெளியில்
தொலைந்து
போன வசந்தங்கள்

தவிப்பின் தகிப்பில் அன்பு ஒன்றுக்காய்
ஏங்கும் என்இதயத்து அறை
மறையாத என் நினைவில்
என்றும் அழியாத கல்லறைக்
காவியங்கள்.

நிலவின் ஒளியில் இருந்து தெரு
ஓரத்தில் கிடந்து
சிதைந்து போன என் வாழ்வையும்
இழந்து போன
என் உறவையும் நினைக்கிறேன்
[illegible] கனியும் என்ற தவிப்பில்...

- பவித்திரா.

# சாகுமா? தப்புமா?

பிணங்களையே புசிக்கும்?
அணங்கு தலைமையிலான
ஆட்சிக் கழுகுகள்
வசை பாடுகிறது.
யுத்தப்புலால் பிரியர்கள்
நாங்களென்று.

தூய வெண்மையாய்
சமாதானத்தில் விருப்புற்றிருக்கும்
எம்மது சண்டிச் சண்டி
போர்ச்சாயம் அள்ளித் தெளிக்கிறது.

ஐயோ.........?
நாங்கள் சமாதானத்திற்காகவும்
அரிய உயிர்களை
இழந்துகொண்டிருக்கிறோம்.

குழிகளில் விதைக்கும்
போதொலிக்கும்
அந்தத் துயிலுமில்ல சோகயிசை
இப்போதும்.........!
இடையிடையே கேட்கிறது.
வாழுமிதயங்களை நெருடியபடி,
துயிலுமில்லங்கள் நிறைகின்றன
புதிய முளைகளாக.

சிறகசைக்கவும்,
ஊரவும் தென்பற்று
குற்றுயிராய் கிடக்கிறது
சமாதானப் புறா
அவ்வளவே.


- ஆவரங்கால் சுதன்.

# மீண்டும் எம் [illegible]

மீண்டும் எம் மண்ணில்
முள் முடி தரித்த
யேசுபிரான்
பாரச் சிலுவை சுமக்க
சித்தமாய் இருக்கிறார்.
சமாதானப்புறாவுக்கு
விடுதலை வேண்டி
தோண்டிப் புதைக்கப்பட்ட
மனிதப் புனர் ஜென்மம்
எடுப்பதற்காய்
கல்வாரி மலைப்பாதையில்
சிலுவையுடன் மூன்று
முறைகள்
குப்புற விழுந்து
சவுக்கடி........ வாங்கி
இங்கே குத்தி குதறப்பட்ட
அந்த சமாதானப் புறாவின்
உயிர் பிச்சைக்காய்
மீண்டும் எம் மண்ணில்
சிலுவை சுமக்க
சித்தமாய் இருக்கிறார்.

- ரமணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் ஒலுமடு கமநல நிலையம் புனரமைப்பு

ஒலுமடு கமந்லசேவை நிலையம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இராணுவ நடவடிக்கையின்போது முற்றாகச் சேதமடைந்த இந்த கமநல சேவை நிலையம் - நிகொட் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடற்புலிகளின் அரசியற்துறை மறறும் முல்லை அரசசெயலகமும் இணைந்து இந்தப் புனரமைப்பு வேலை களை மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை, முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தால் - யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன், முல்லைத்தீவு வண்ணான்குளம் கடற்கரையில் கடற்தொழிலாளர்கள் இளைப்பாறு மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த மண்டபம் 6 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, முல்லை நகரில் பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையின் இறுதிக் கட்டட வேலைகளும் இடம்பெற்று வருகின்றன.

நியாப் திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இத்துடன் முல்லைத்தீவு நகரில் பொது நகர மைதானமும் அமைக்கப்பட்டு வருகின்றது.

## இடம் பெயர் சேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை பதிவு செய்யாமலுள்ள காலங் கடந்த பிறப்பு - இறப்பு பதிவுகளை மேற்கொள்ள கிளிநொச்சி மாவட்டச் செயலகம் இடம்பெயர் சேவை ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்த இடம்பெயர்சேவை அடுத்த மாதம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் நடத்தப்படவுள்ளதாகவும், எனவே இந்தப் பதிவுகளை மேற கொள்ளாதவர்கள் இந்த இடம் பெயர்சேவையில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர்.

# வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் செப்ரெம்பர் நான்காம் திகதி கண்காட்சி

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி அரசினர் விவசாய மாதிரிப் பண்ணையில், அடுத்தமாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதிவரை மாபெரும் விவசாயக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயத் திணைக்களம், யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம், தெங்கு அபிவிருத்திச்சபை ஆகியன ஒன்றிணைந்து - இந்தக் கண்காட்சியினை ஏற்பாடு செய்துள்ளன.

விவசாயம், பயிர்ச்செய்கை, கால் நடைவளர்ப்பு, தெங்கு உற்பத்தி என்பன தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய புதிய நவீன தொழில்நுட்பமுறைகள், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல், மாற்றுப் பயிர்ச்செய்கைமுறை என்பன தொடர்பாக விவசாயிகள், பொதுமக்களுக்கு போதிய விளக்கத்தை அளிக்கும் வகையில் இந்தக் கண்காட்சி அமையுமென்று தெரிவிக்கப்பட்டது. (14)

## தேசிய எழுச்சிப் பேரவையின் விசுவமடுப் பிரதேச சங்கமம்

(விசுவமடு)

விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் சங்கம நிகழ்வு- பாரதிபுரம் பாடசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ப.பத்மநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், பொதுச் சுடரை வாரியப்புலம் கிராம அலுவலர் சுந்தரலிங்கம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை விசுவமடு அரசியற்துறை கோட்டப் பொறுப்பாளர் பொ.தங்கன் ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் காண்டீபன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச் சிப்பேரைவயின் செயலாளர் மாசிலாமணி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் திருமாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## லெப்.கேணல் ராஜனின் 12 ஆவது ஆண்டு நினைவுதினம்

(கிளிநொச்சி)

மாவீரர் லெப்டினன்ட் கேணல் ராஜனின் 12 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு, நேற்றுமுன்தினம் கிளிநொச்சியிலுள்ள லெப்டினன்ட் கேணல் ராஜன் கல்விப் பிரிவின் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - ஒளிச்சுடரை லெப்டினன்ட் கேணல் தூயவன், அரசறிவியல் கல்லூரி பொறுப்பாளர் பார்த்திபன் ஏற்றிவைத்தனர்.

லெப்டினன்ட் கேணல் ராஜனின் திருவுருவப்படத்துக்கு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் நகுலன் ஈகைச்சுடரேற்றி, மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மாவீரரின் திருவுருவப்படத்துக்குப் பொறுப்பாளர்கள் மலர்மாலை அணிவித்தனர்.

லெப்டினன்ட் கேணல் நகுலன் நினைவுரையாற்றினார். கல்விப்பிரிவு நிர்வாகப் பொறுப்பாளர் தீபன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

### கடும் வரட்சியினால்

# குடிநீருக்குத் தட்டுப்பாடு ஒலுமடு மாணவர்கள் அவதி

வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஒலுமடுப் பாடசாலையில், குடிநீருக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால், இந்தப் பாடசாலைகளில் அமைந்துள்ள கிணறுகள் உட்பட இந்தப் பிரதேசத்தின் கிணறுகளும் வற்றியுள்ளதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மாணவர்களின் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வவுனியா பிரதேசசபை ஆயிரம் லீற்றர் கொள்ளளவுள்ள பிளாஸ்ரிக் நீர்த் தாங்கி ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, விசுவமடு பிரதேச முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி - வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி அரசினர் ஆலோசகர் ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் குருகுலராசா, முன்பள்ளி நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்றிவைத்தார்.

கண்காட்சி மண்டபத்தின் முதலாவது தொகுதியை முல்லைக்கல்வி வலயப் பணிப்பாளர் குருகுலராசாவும், இரண்டாவது தொகுதியை வட-கிழக்கு மாகாண முன்பள்ளி இணைப்பாளர் கணேசலிங்கமும், முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் செல்வநாயகம் ஆகியோர் நாடாவை வெட்டித்திறந்து வைத்தனர்.

# இடைக்கால நிர்வாகசபையை பெறத்தவறின் மோசமான பிரச்சினைகளை எதிர்நோக்குவோம்

## கூட்டமைப்பு எம்.பி.கஜேந்திரகுமார் தெரிவிப்பு



இருபத்திஐந்து வருடங்களுக்கும் மேலாக பேரழிவுகளுக்கு முகம் கொடுத்துவரும் எமது மக்களது இயல்பு வாழ்க்கை மேம்படுத்தப்பட வேண்டுமாயின், எமது பிரதேசத்துக்கென ஒரு தெளிவான நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதை எமது மக்கள் உணர்ந்து கொண்டனர்.

அதனால்தான் இன்று இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இலங்கை செவிப்புலனற்றோர் சங்கத்தினது வருடாந்தப் பொதுகூட்டம் நேற்று முன்தினம் கலட்டியிலுள்ள சங்கத் தலைவர் செயலகத்தில், தலைவர் செ.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட யு.என்.எச்.சீ.ஆர். நிறுவனப் பிரதிநிதிகள், பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்து கலந்து கொண்ட, அந்த நாட்டு செவிப்புலனற்றோர் சங்கப் பிரதிநிதிகள், உட்பட, இந்தச் சங்கத்தினது நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எம்மைத் தங்களது பிரதிநிதியாகத் தெரிவு செய்த உங்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் செய்யக்கூடிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றி வேதனையோடு உங்களுடன் கருத்துப் பரிமாறிக்கொள்ள விரும்புகின்றேன்.

வருடம் ஒன்றுக்கு எமது மக்களது அபிவிருத்திக்காக ஐம்பது லட்சம் ரூபாவை, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு ஒதுக்குகிறது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் இணைந்த யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் என்ற அடிப்படையில் ஒதுக்கப்படும் இந்த நிதியினையே, இந்த இரு மாவட்ட மக்களுக்குமாக நாம் ஒதுக்க வேண்டியுள்ளது.

கடந்த இருபத்தி ஐந்து வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, தமது அடிப்படை வாழ்வாதார வளங்கள், தொழில் வாய்ப்புக்களை இழந்து, பொருளாதாரக் கட்டமைப்பு முற்றாக சிதைக்கப்பட்ட ஒரு சமூகத்துக்கு - இந்த நிதி ஒதுக்கீடு எந்த அளவுக்கு உதவக்கூடியது என்பதை, நீங்கள் ஒரு தடவை கவனத்துக்கு எடுக்கவேண்டும்.

உங்களைப் போன்றே எமது சமூகத்தில் பல நிறுவன அமைப்புக்கள் - தமது தேவைகளை நிறைவேற்றித் தருமாறு எங்கள் முன் கோரிக்கை வைக்கின்றனர்.

நாங்களும் அவற்றை எடுத்துக் கொண்டு, உரிய அமைச்சுக்களிடம் சமர்ப்பித்து, நிறைவேற்றுமாறு கேட்கின்றோம்.

அவர்கள் அவற்றை எழுத்தில் ஆவணங்களாகத் தருமாறு கேட்கின்றனர்.

நாங்களும் முழுவிபரங்களோடு, சிலவேளை செயற்திட்ட முன்மொழிவுகளாகவேகூட கொடுக்கின்றோம்.

அவற்றைப் பெற்றுக்கொள்வதோடு, எங்களையும் எங்கள் கோரிக்கைகளையும் மறந்து விடுகின்றனர்.

தங்களை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்த பெரும்பான்மையின மக்களது குறைகள், தேவைகளை நிறைவேற்றுவதே தமது அரசியல் வாழ்வுக்கு முதலீடானது என்ற நோக்கில், தமது பிரதேசங்களது அபிவிருத்தியையே பிரதானமாகக் கருதிச் செயற்படுகின்றனர்.

நாம் வேறு இன மக்களாக இருப்பதனாலேயே இவ்வாறான புறக்கணிப்புக்கு உள்ளாகின்றோம்.

இன்னும்கூட ஒரு கசப்பான உண்மையை அவர்கள் உணர்வதாயில்லை.

நாடு மிகமோசமான பொருளாதார அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. இன்று அவர்களது மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவே போதுமான நிதியற்று இருக்கின்றார்கள். இதனால் வெளிநாட்டு உதவிகளை மிக அவசரமாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எதிர்பார்க்கும் அந்த வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் பட்சத்தில், எமது மக்களுக்கும் அந்த உதவிகள் வந்துசேரும் என நாம் எதிர்பார்க்க முடியாதுள்ளது.

இன்று யுனிசெவ் போன்ற சர்வதேச நிறுவனங்கள், சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, குழந்தைகள் தொழிலாளர்களது அதிகரிப்புக்கு எதிரான செயற்பாடுகள் போன்றவற்றில் மிக அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றன.

இலங்கையில்கூட சிறுவர் உரிமைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், சட்டப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்துக்கு ஏற்ப, நடைமுறையில் பெறுபேறுகளைக் காணமுடியாதுள்ளது.

எமது பிரதேசங்களைப் பொறுத்தவரை, பெற்றவர்களுக்கு உழைப்பு இல்லை. உழைப்பதற்கான வளங்களும் எமது மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன.

விவசாயம் செய்ய நிலத்தில் இறங்கமுடியாது. ஒருபக்கம் மிதிவெடி, இன்னொருபக்கம் பாதுகாப்பு வலயம். கடலில் இறங்கி சுதந்திரமாகத் தொழில்புரிய அனுமதியில்லை.

இந்த நிலையில் எப்படி உழைப்பற்ற - வருமானம் இல்லாத பெற்றோரால் குழந்தைகளது தேவைகளை நிறைவேற்றமுடியும்? பசியை ஆற்ற முடியும்? இந்த நிலையில் தனது பசியைப்போக்க அந்தப் பிள்ளையே தொழில்புரியவேண்டிய சூழ்நிலையினுள் தள்ளப்படுகின்றது.

இதுவே இன்று யதார்த்தமாக உள்ளது. குழந்தைகளைப் பாதுகாக்கவென சட்டங்கள் பல இயற்றப்படலாம். ஆனால், நடைமுறையில் அவற்றை நிறைவேற்றப் பொருத்தமான வேலைத்திட்டங்கள் அவசியமாகின்றன.

இவ்வாறான வேலைத்திட்டங்கள் - அடிப்படைப் பிரச்சினைகளைத் தொட்டுநிற்பவையாக இருக்க வேண்டும்.

தேவைகளும், வளங்களும் சரியாக இனம்காணப்பட்டு, அதற்கேற்றதான செயற்திட்டங்களே முன்வைக்கப்படல் வேண்டும்.

மாறாக மேல்மட்டத்திலிருந்து திட்டங்களைத் தீட்டிவிட்டு, அதனை அடிமட்டத்தில் செயற்படுத்தும்படி திணிப்பதனால், எதிர்பார்க்கும் நன்மைகளை கிராம மக்கள் அனுபவிக்க முடியாது.

இதனால்தான் நாம் எமது பிரதேச அபிவிருத்தியைத் திட்டமிட்டு முன்னெடுக்க இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையினைக் கோரி நிற்கின்றோம்.

இதனை வென்றெடுப்பதே இன்று எம்முன் உள்ள பிரதான கடமையாகும்.

இதனை நாம் சரியாக வென்றெடுக்கத் தவறிவிட்டால், இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைவிட பலமடங்கு மோசமான பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ளவேண்டி ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறை என்று வைக்கப் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் யுத்தத்திற்கான சமிக்ஞைகள்...!

முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது தமிழ் மக்களுக்கு எதிரான 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற பெயரிலான போர் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த பொழுது அப்போது பிரதமராக இருந்த இப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பின்வருமாறு இனவெறியூட்டும் மிகவும் மோசமான கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

'பௌத்த விகாரைகள் எல்லாம் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் மையங்களாக செயற்படவேண்டும்'

இது அவர் வெளியிட்ட கருத்தாகும்.

போரில் இராணுவத்தரப்புக்கு ஏற்பட்ட ஆளணி இழப்பை ஈடு செய்யவும், விடுதலைப் புலிகளின் தாக்குதல் வேகத்திற்கு ஈடுகொடுக்கமுடியாது இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்காகவும் பெருமளவில் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையொன்றை தீவிரமாக மேற்கொள்ள முயன்றவேளையிலேயே அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

ஆன்மீக நிலையங்களான பௌத்த விகாரைகளில் யுத்தத்தை முன்னெடுக்கும் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கூறிய அதே ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு - இப்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வழங்கியதன் மூலம் ஜனாதிபதி தன் உள்நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவரீதியில்தான் தீர்வுக்கான வேண்டும் என்பதில் முனைப்பான எண்ணக்கருவைக் கொண்டவரான ரத்னசிறி விக்கிரமநாயக்க - பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்ற பின்னர், சமாதானத்தை சந்தேகத்திற்குரியதாக்கும் அல்லது கேள்விக்குறியாக்கும் பல தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார் என்றே கூறவேண்டும்.

சர்வதேச சமூகத்திற்கு எப்போதுமே தன்னை ஓர் சமாதானப் பிரியையாக காட்டுவதில் தீவிரம் காட்டும் ஜனாதிபதி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நீண்ட நெடுங்காலம் உறுப்பினராக இருந்து பேரினவாத சிந்தனையில் மூழ்கித் திளைத்தவரான ரத்னசிறி விக்கிரமநாயக்கவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக்கி தேசிய ரீதியில் தான் இன்னமும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற தனது சித்தாந்தத்தில் இருந்து விடுபடாத ஒருவராகவே இருப்பதாக உணர்த்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

ரத்னசிறி விக்கிரமநாயக்க பதவிப் பிரமாணம் செய்தது முதல், விடுதலைப் புலிகளுக்கு எதிரான குற்றம் சுமத்தும் பாணியிலான அறிக்கைகள் விடத் தொடங்கியுள்ளமையானது, அவர்களைச் சீண்டி சினங்கொண்டு யுத்தத்திற்கு இழுக்கும் நோக்கினைக் கொண்டதாகவே உள்ளது.

விடுதலைப் புலிகள் மீண்டும் போருக்குத் தயாராகி வருவதாகவும், அதற்கான செயற்பாடுகளில் அவர்கள் முனைப்பாக ஈடுபட்டுள்ளதாகவும் அபத்தமாக அறிக்கை விட்டுவரும் அதே வேளை, படைத்தரப்பினர் எந்த நேரமும் தயார் நிலையில் உஷாராக இருக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் படையினரை சீண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் தான் சும்மா பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன் எனவும் யுத்தகாலச் சூளுரை ஒன்றைப் போன்ற தொனியில் உளறியுமுள்ளார்.

இன்றைய சமாதான சூழலில் அவரின் இந்த அறிவிப்பானது படையினர் மத்தியில் மீண்டும் யுத்த சன்னத இயல்பைத் தூண்டும் நடவடிக்கையாகவே உள்ளது. அது மட்டுமல்லாது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மீதும் அவர் தன் கண்டனக் கணையை செலுத்தியுள்ளார். அதாவது இந்த அமைதி நடவடிக்கை பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர் பக்கச்சார்பாக - புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுகின்றார்களாம்.

ஏக காலத்தில் விடுதலைப் புலிகளையும், நோர்வேயின் சமாதான ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அனைவரையும் குற்றஞ்சாட்டி ஆதாரபூர்வமற்ற முறையில் விமர்சிப்பதோ, கண்டிப்பதோ சம்பந்தப்பட்டவர்களுக்கு எரிச்சலையும், சினத்தையும் ஏற்படுத்தும் விடயமாகும்.

இதற்கும் மேல் வடக்கில் பல்வேறு இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கும் விஜயம் செய்து படையினருக்கு போருணர்வையூட்டும் வகையில் உரையாற்றி உற்சாகப்படுத்தி வருவதாகவும் தெரிகிறது. இது சமாதானத்தை புறந்தள்ளி அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையேயாகும்.

ரத்னசிறி விக்கிரமநாயக்க அத்துடன் நின்றுவிடவில்லை. தென்பகுதியில் மீண்டும் யுத்தகாலச் சூழலை உருவாக்கும் முயற்சிகளுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் தொடங்கிவிட்டார்.

கிழக்கிலும், கொழும்பிலும் புதிய பாதுகாப்பு நடைமுறைகளை அவர் அமுலுக்கு கொண்டு வருவதன் மூலம் கெடுபிடி நிலையொன்றை ஏற்படுத்த தொடங்கியுள்ளதாக தெரிகிறது. இது இப்பகுதிகளில் 'வசிக்கும் தமிழ் மக்கள் மனதில் மீண்டும் அச்சத்தையும், பீதியையும் உருவாக்கத் தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கொழும்பில் தமிழ் மக்களின் நடமாட்டத்தை கண்காணிக்க சிவில் உடையணிந்த படைத்தரப்பு நபர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திடீர் சோதனை மற்றும் தேடல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. கைது நடவடிக்கைகளும் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. அங்கு வாழும் தமிழ் மக்கள் மீண்டும் பொலிஸ் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் நிர்ப்பந்திக்கப்படுவதாக செய்திகள் கூறுகின்றன.

இது 1995 ஆண்டின் பின்னர் 2001 ஆண்டு வரையிலான பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கால நெருக்கடி நிலைச் சூழலை உருவாக்கமுனையும் முயற்சியாகவே கருதவேண்டியுள்ளது.

இந்த முயற்சி மீண்டும் அரசு யுத்தத்தை ஆரம்பிக்கும் தனது விருப்பை வெளிப்படுத்துவதற்கான சமிக்ஞைகளாகத் தென்படுவதாக அரசியல் மற்றும் இராணுவ நோக்கர்கள் கூறுகின்றனர். எந்த வகையில் பார்த்தாலும் சமாதான சூழலை இலங்கை மெல்ல மெல்ல இழந்து கொண்டு போவதாகவே தெரிகின்றது.

# நாடும் நடப்பும்



*செய்தி* - சமாதானத்திற்கான அச்சுறுத்தல் அரச தரப்பிலிருந்து அதிகரித்துவரும் வேளையில் மௌனம் சாதித்துவருகிறார் என அரசியல் நோக்கர்கள் விமர்சிக்கின்றனர்.

# சர்வதேச புத்தகக் கண்காட்சி செப்ரெம்பர் 6 இல் ஆரம்பம்!

(கொழும்பு)

இந்த ஆண்டின் சர்வதேச புத்தகக் கண்காட்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும், அதன் அருகே அமைந்துள்ள சிறிமாவோ கண்காட்சி மத்திய நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் வருகைதருவார்கள் என புத்தகக் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். 56 வெளிநாட்டுக் கண்காட்சி காட்சியாளர்களும், 120 உள்நாட்டுக் காட்சியாளர்களும் பங்கேற்கும் இந்த நிகழ்வில் 298 கண்காட்சி அறைகள் அமைக்கப்படும்

இலங்கையின் பிரபல்யமான நான்கு புத்தக வெளியீட்டாளர்கள் இந்தக் கண்காட்சியின் அனுசரணையாளராக இருப்பதற்கு இந்தவாரம் கொழும்பில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

எம்.டி.குணசேன நிறுவனம் இதன் பிரதான அனுசரணையாளராகவும், இரண்டாவது தடவையாக இவ்வருடம் பொறுப்பேற்றுள்ளது.

(தே)

# நிவாரணம் மீளாய்வு செய்வதற்கு இடம்பெயர்ந்த மக்கள் கடும் எதிர்ப்பு

## கூட்டத்தை பகிஷ்கரித்தனர்

இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்டுவந்த உலர் உணவு நிவாரண விநியோகத்தை மட்டுப்படுத்தும் வகையில் அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் மீளாய்வு நடவடிக்கையினை வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் பகிஷ்கரித்துள்ளனர்.

கடந்தகால போர் நடவடிக்கைகளினால் தற்போது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்டிருக்கும் வலிகாமம் வடக்கின் கரையோரக் கிராமங்களான மயிலிட்டி - பலாலி மற்றும் வளலாய் வடக்கு ஆகிய பகுதிகளிலிருந்தும், வடமராட்சி கிழக்கு - நாகர்கோவிலிருந்தும் இடம்பெயர்ந்து வாழும் மக்களே இந்த மீளாய்வு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி வடமராட்சி வடக்கு சக்கோட்டைப் பகுதியில் மீளாய்வு நடவடிக்கைக்காக கூட்டப்பட்ட அரச அதிகாரிகளின் கூட்டத்தைப் பகிஷ்கரித்ததுடன் அந்த மக்கள் அங்கிருந்து வெளிநடப்பும் செய்தனர். மற்றும் தும்பளை லூர்த்து மாதா கோவில் முகாம், இலட்சுமணன் தோட்ட முகாம், கற்கோவளம் முகாம ஆகியவற்றில் தங்கியிருக்கும் மக்கள் அனேகர் மீளாய்வு நடவடிக்கைக்கு சமூகம் கொடுக்காமலும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த நடவடிக்கைகளுக்காக சென்ற பருத்தித்துறை பிரதேச செயலக அதிகாரிகள் ஏமாற்றமடைந்தனர்.

தம்மைச் சொந்த இடங்களில் குடியமரவும், தொழில் நடவடிக்கையில் ஈடுபடவும் அனுமதிக்காத நிலையில், அரசினால் வழங்கப்படும் உலர் உணவு நிவாரண விநியோகத்தை மட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை மக்கள் எதிர்த்து வருகின்றனர்.

இதனிடையே இந்தப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த 150 குடும்பங்களுக்கு மேற்பட்டோர் வடமராட்சி வடக்கின் கரையோரக் கிராமங்களில் அடிப்படை வசதிகள் குறைந்த முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் தொழிலிழப்பு, இடம்பெயர்வு, குடும்பத் தலைவர்களை இழந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் அரசின் உலர் உணவு நிவாரணத்தை நீண்டகாலமாக பெற்று வருகின்றன.

நிவாரணம் பெறுவோரின் அளவைக் குறைக்க, அரசு இந்த வருட ஆரம்பத்தில் முற்பட்டிருந்த போதிலும் பல தரப்பினரதும் எதிர்ப்பினை அடுத்து தற்காலிகமாக வழமைபோன்று நிவாரணத்தை வழங்க அரசு உடன்பட்டிருந்தது. ஆயினும், உரிய மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு பட்டியலைச் சமர்ப்பிக்குமாறு யாழ்.செயலகத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. இதனையடுத்தே, வடமராட்சி உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் செயலக அதிகாரிகள் இந்த மீளாய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14,21)

# நாட்டில் சமாதானம் வேண்டி சத்தியாக்கிரகம் இருக்க ஏற்பாடு

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் மலரவேண்டும் என்று பிரார்த்தித்து, பல்வேறு பிரதேசங்களிலும் சத்தியாக்கிரகங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தச் சத்தியாக்கிரக நிகழ்வுகளில் மதகுருமார், வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள் மாணவர்கள் ஆகியோரைப் பங்குகொள்ளச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

பயங்கரவாதத்தை ஒழித்து, சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஆசீர்வாதத்தைப் பெறுவதே இந்த நடவடிக்கையின் [illegible] முதலாவது கட்டம் சமீபத்தில் கதிர்காமத்தில் கிரி விகாரையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்துடன் ஆரம்பமாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாக்களிப்பிற்கு அடையாள அட்டை பயன்படுத்துவது குறித்த சட்டத்திற்கு திருத்தங்கள் சமர்ப்பிப்பதற்கு முடிவு

வாக்களிப்பின் போது அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் தேர்தல் சட்டத்துக்கு திருத்தங்கள் இரண்டைச் சமர்ப்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் தீர்மானித்துள்ளன.

அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டம் செயற்படுத்தப்படும் நாளினைத் தீர்மானிப்பது தேர்தல் ஆணைக்குழு என்பது ஒரு திருத்தமாகும். சட்டத்தினைச் செயற்படுத்தப் போகும் திகதியை தீர்மானிப்பதற்கு முன், பதிவு செய்யப்பட்ட அரசியற் கட்சிகளோடு தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடி அனைவருக்கும் வாக்களிப்பதற்கு இயலும் என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு இந்தச் சட்டத்தினை அமுல்படுத்தும் திகதியும் தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கவேண்டுமென்பது இரண்டாவது திருத்தமாகும்.

இந்தச் சட்டத்தினை அவசரமாக நடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதில்; வாக்காளர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு வாக்கினைப் பாவிக்கும் சந்தர்ப்பம் இல்லாமற் போய்விடும் என ஐக்கிய தேசியக்கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் கூறியுள்ளன.

விசேடமாக மலையகத்தில் மூன்று லட்சம் பேருக்கு இன்னும் அடையாள அட்டை கிடைக்கவில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறியுள்ளது.

தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்டத்தைச் செயற்படுத்துவதற்குமுன் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு விரைவாக அடையாள அட்டை வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரநோக்கு... - யாழவன்

# குருக்கள் செய்தால் குற்றமில்லை! இது எந்தவகையில் நியாயமாகும்?

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கொள்வனவு செய்கிறார்கள். ஆட்சேர்ப்பிலே ஈடுபடுகிறார்கள். கடற்புலிகள் தீவிரமாக முல்லைத்தீவுக் கடற்பரப்பிலே பயிற்சிகளிலே ஈடுபடுகிறார்கள். இதன் மூலமாக புலிகள் மீண்டுமொரு போருக்காக தம்மை தயார்ப்படுத்துகிறார்கள் என, இனவாதிகள் கூட்டம் கூச்சலிடத் தொடங்கி விட்டது. இதே கூட்டத்தினரே விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறி வருவதாகவும், பிரசாரப்படுத்தி சர்வதேச ரீதியாக புலிகளுக்கு எதிரான ஒரு நிலையை தோற்றுவிக்கவும் முயல்கின்றனர்.

இவர்களுடைய நிலைப்பாடு என்று சரியானதாக இருக்குமானால் விடுதலைப் புலிகள் ஒரு சாதாரணமான போராளிகள் குழுவாக இயங்கிக் கொண்டிருப்பார்களாயின் இனவாதிகள் கூறுவது போல புலிகள் தம்மை இராணுவ ரீதியாக பலப்படுத்துவதை தவறானது என நியாயப் படுத்த முடியும். ஆனால் அவ்வாறான தொரு நிலையிலே தமிழ்த் தேசியத்தினுடைய தலைமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அதாவது ஒரு நாட்டின் அரசுக்கு இருக்க வேண்டிய அத்தனை தகுதிகளையும் கொண்டவர்களாக ஈழத்தமிழ் மக்களின் காப்பரணாக இலங்கையிலுள்ள இன்னொரு இராணுவ அணியாக பலம் பெற்றிருந்த வேளையில் தான் விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையிலே கைச்சாத்திட்டார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒரு முக்கிய சரத்தாக குறிப்பிடப் படுவது, இராணுவச் சமநிலையை பேணுதல் என்பதாகும். இது ஆரம்பத்திலே விடுதலைப்புலிகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் அரச தரப்பினால் கூறப்பட்ட பிரேரணையாக இருந்தாலும், தற்போது அதே சரத்துத்தான் விடுதலைப்புலிகள் பக்கம் நியாயம் இருப்பதை கோடிட்டுக் காட்டுகின்றது.

மேலும் இந்த இலங்கை அரசாங்கம் குறிப்பாக தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் சமாதானத்துக்காகத்தான் செலவிட்ட காலங்களை விட போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்ட காலங்களே அதிகம். புதிய அரசு பதவியேற்ற கையோடு கூட்டு இராணுவப் பயிற்சி எனும் போர்வையிலே இலங்கைப் படையினருக்கு, அமெரிக்கப் படையினரின் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அது மட்டுமன்றி இலங்கையின் இராணுவத் தளபதிகளையும், உயரதிகாரிகளையும் அமெரிக்காவுக்கு அழைத்து அங்கு போரியல் ஆலோசனைகளை வழங்கியது மட்டுமன்றி அன்பளிப்பாக போர்க் கப்பலொன்றையும் வழங்கியிருந்தது அமெரிக்கஅரசு.

இந்திய அரசும் தனது பங்குக்கும் ஒரு போர் கப்பலையும், ஒரு தொகுதி ஆயுதங்களையும் வழங்கியிருந்தது. பாகிஸ்தானும் பண உதவி புரிந்தது. அந்த பண உதவியும் போர்த் தளபாடங்கள் கொள்வனவிலே பயன்படுத்தப்பட்டது. இஸ்ரேலிடமிருந்து, இலங்கை ஆயுதங்களை கொள்வனவு செய்த விடயம் தொடர்பாக இஸ்ரேலிய உயரமைச்சர் ஒருவரும் இஸ்ரேலிய அரசினால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டால் இவை வெளிநாடுகள் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட போருக்கான ஆயத்தங்கள்.

**புலிகளின் பகுதிக்கு படைகளை அணி வகுத்து அனுப்புவேன் என ஜனாதிபதி கடந்த வாரம் கூறியிருக்க, தற்போது இராணுவத்தளபதியோ தாக்கினால் உடன் திருப்பித் தாக்குமாறு படைகளுக்கு தாம் உத்தர விட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த உத்தரவானது அரசு போரை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பொன்றை எதிர் பார்த்திருப் பதை புலப்படுத்தியுள்ளது.**

உள்நாட்டிலும் சற்றும் குறையாத வண்ணம் போருக்கான முன்னேற்பாடுகள் அரசினால் முடக்கி விடப்பட்டன. குடாநாட்டின் முக்கிய படைத்தளமான பலாலி படைத் தளத்திலேயுள்ள இராணுவத்தினருக்கு விசேட பயிற்சிகள் என்ற போர்வையிலே போரை எதிர்கொள்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாக உயர் பாதுகாப்பு வலயங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டன. தமது சொந்த வீடுகளை பார்வையிடச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் உயர் பாதுகாப்பு வலயத்தை காரணம் காட்டி திருப்பி அனுப்பப்பட்டனர். அறுநூறு மீற்றர்கள் உயர் பாதுகாப்பு வலயத்தை பின் நகர்த்த வேண்டுமெனும் நிபந்தனையும் காற்றோடு பறக்கவிடப்பட்டது.

வெறும் கண்துடைப்புக்காக ஓரிரு இடங்களில் மட்டும் பாதுகாப்பு முன்னரங்கை பின் நகர்த்திய இராணுவம், அந்தப் பகுதிகளிலே குடியேறிய பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலே செயற்பட்டு வந்தது. இன்றும் செயற்பட்டு வருகிறது. இந்த நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும், ஆலோசனைகளை வழங்குவதற்கும் என இந்திய உயரதிகாரி சதீஸ் நம்பியார் உட்பட அமெரிக்க இராணுவத்தின் பிராந்திய தளபதிகளும் தமிழர் தயாகத்துக்கு வந்து இங்குள்ள இந்த மக்களின் ஜனநாயக உரிமையை மனிதஉரிமையை மீறும் விதத்திலே கருத்துக்களை வெளியிட்டு திரும்பியிருந் தனர்.

இவ்வாறு அடுத்தடுத்து தொடர்ச்சியாக போருக்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்ட அரசு, சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெறுமதி வாய்ந்த போராளிகள் பலருடைய உயிரையும் பலியெடுத்திருந்தது. போரிலே தமது போராளிகளை இழந்த புலிகள் நீடித்த நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதற்காக திறமையும், ஆற்றலும் மிக்க தமது இருபத்தைந்துக்கும் மேற்பட்ட போராளிகளை கடலிலே பறிகொடுத்தனர். ஆனாலும், பொறுமை இழக்காது தொடர்ந்தும் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு மதிப்பளித்து செயற்பட்டு வந்த புலிகளையே அரசு இன்று குற்றம்சாட்டுகிறது.

ஆனால், இந்த குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது எவ்வாறு அரசு நேரடியாகவும், மறைமுகமாகவும் போருக்கான ஏற்பாடுகளை மேற்கொள்கிறதோ. அதே போலவே புலிகளும் தமது இராணுவச் சமநிலையை பேணுவதற்காக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான விடயமல்ல. ஆனால், இதனை பூதாகரப்படுத்தி தனது அரசியலை கொண்டு செல்வதற்காக அரசு பயன்படுத்துவது வேதனையான விடயம்.

இது எவ்வாறு இருக்கின்றது எனில் "குருக்கள் செய்தால் குற்றமில்லை" என்பது போன்றதாகும். அரசு தம்மை பலப்படுத்தலாம். ஆனால் புலிகள் தம்மை பலப்படுத்தக்கூடாது. இது எந்த வகையிலே நியாயமானது. எவ்வாறு சர்வதேச சட்டங்களுக்கு சார்பானது. என்றெல்லாம் சிந்திக்க வேண்டிய நிலை இன்று தோன்றியுள்ளது.

புலிகளின் பகுதிக்கு படைகளை அணி வகுத்து அனுப்புவேன் என ஜனாதிபதி கடந்தவாரம் கூறியிருக்க தற்போது இராணுவத்தளபதியோ தாக்கினால் உடன் திருப்பித் தாக்குமாறு படைகளுக்கு தாம் உத்தர விட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த உத்தரவானது அரசு போரை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பொன்றை எதிர்பார்த்திருப்பதை புலப்படுத்தியுள்ளது.

தற்போதுள்ள நாட்டின் ஸ்திரமற்ற நிலையினால் பல தொடர் கொலைகள் நடைபெற்ற வண்ணமுள்ளன. இதனை காரணமாக வைத்து எப்படியாவது, எப்பாடுபட்டாவது இந்தக் கொலைகளுக்கும் புலிகளுக்கும் தொடர்பை ஏற்படுத்தி, புலிகள் மீதும், தமிழ் மக்கள் மீதும் கொடிய போரை கட்டவிழ்த்து விடுவதே இனவாதிகளின் நோக்கமாகும்.

ஆனாலும் சர்வதேச கண்காணிப்புக்கு இனவாதிகளின் திட்டத்துக்கு நிதி உதவி கிடைக்குமெனும் நிலைப்பாடு தோன்றியுள்ளமையால் சமாதானத்தை ஏற்படுத்த அரசு தள்ளப் பட்டுள்ளது. ஆனாலும், அரசுக்கு சமாதானம் மீது எந்தவிதமான ஆர்வமோ, நம்பிக்கையோ இல்லை.

புலிகள் மீது மீண்டும் குற்றம் சாட்டுவதிலேயே தனது காலத்தைக் கழிக்கும் அரசு சமாதானப் பாதைகளில் இருந்து வழுவுவதற்குத் தயாராகவுள்ளது. அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துள்ளது. போரின் தாக்கத்தைப் பொருளாதார ரீதியாகவே நேரடியாக அனுபவித்த சிங்கள மக்களுள் சிலரும் அரசின் நடவடிக்கைகளுக்குத் துணைபோகின்றனர்.

இலங்கையை ஒரு பௌத்த, சிங்கள நாடெனப் பிரகடனப்படுத்தியும், அதன் அடிப்படையிலேயே செயற்பட்டு வருவதுமான கட்சிகளைக் கொண்ட புதிய அரசைத் தெரிவு செய்தவர்கள் [illegible] தவறைத் தொடர்ந்து வருகின்றனர்.

தற்போதைய நிலையிலே இலங்கை பொருளாதார ரீதியாகப் பாரிய வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. கடந்த வருடம் இருந்த பொருளாதார வளர்ச்சி வீதங்கள் இந்த வருடம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. வெளிநாட்டுப் பணங்களின் பெறுமதி வெகுவாக அதிகரித்து, இலங்கையின் பணப் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. இது எரிபொருட்களின்விலை பஸ் கட்டணங்கள் என்பவற்றிலே அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், வெளிநாட்டு முதலீடுகள் வெகுவாகக் குறைந்துள்ளதுடன் அந்நியச் செலாவணி வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. திறைசேரியும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றது.

ஆளணி அரசு இவைபற்றி எதுவுமே சிந்திக்காது போருக்கான செலவீனங்களையும், பாதுகாப்புச் செலவீனங்களையும் அதிகரித்துள்ளதுடன் தனது கட்சி நலன்களைக் கருத்திற்கொண்டு திறைசேரியிலே போதிய பணம் இல்லாதபோதும் வேலையற்ற பட்டதாரிகளுக்குக் கண்துடைப்பு நியமனங்களை வழங்கி வருகின்றது.

அரசின் இந்த நடவடிக்கைகளின காரணமாகத் தென்னிலங்கை பாதிப்புக்குள்ளாவது தவிர்க்கப்பட முடியாததாகவிருந்தாலும், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் பாதிப்புக்கு உள்ளாவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இருபது வருடப்போரினால் பாதிப்புற்ற தமிழர்கள் தொடர்ந்தும் அல்லற்பட தயாராகவில்லை. சமாதான வழியிலே அரசு தீர்வை வழங்க முன்வராவிட்டால் போராடித் தனிநாடு அமைப்பதைவிட அவர்களுக்கு வேறு வழியே கிடையாது. இந்தத் துர்ப் பாக்கியமான சூழ்நிலையை அரசின் செயற்பாடுகளே ஏற்படுத்தி விடக்கூடாது.

விடுதலைப் புலிகளின் போராளிகள் இராணுவ முகாம்களுக்கு அண்மையிலே வைத்துச் சுட்டுக்கொலை செய்யப்படுகின்றமையும், கொலையாளிகள் இலகுவாகத் தப்பிவிடும் சூழ்நிலையும் இந்தக் கொலைகளுக்குப் பின்னால் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு இருப்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஓடிப்போன கருணாவும், தேசவிரோத ஈ.பி.டி.பி குழுவும் இணைந்தே இந்தக் கொலைகளைச் செய்துவருகின்றதாக செய்திகள் வெளிவந்துமுள்ளன. தமது உட்பூசல்களின் காரணமாகத் தமது குழுவைச் சேர்ந்தவர்களைத் தாமே சுட்டுக் கொலைசெய்துவிட்டு அந்தப் பழியைப் புலிகள் மீது சுமத்தி விடுவதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் குற்றஞ் சாட்டுதலுக்கு அரசும் வலுச்சேர்த்துப் பேசுவதனால் அது சர்வதேச அளவிலே புலிகள் தொடர்பான வித்தியாசமானதொரு படத்தை ஏற்படுத்திவிடுகிறது. இதனால், புலிகளுக்கு நெருக்கடிகளும், அழுத்தங்களும் அதிகரிக்குமென அரசு கனவு காண்கிறது. ஆனால், எல்லாமே ஆலோசனைகளாகவே வெளிப்படுகின்றனவே தவிர எவையும் அச்சுறுத்தியதாக இல்லை.

நாளாந்தம் வன்னிக்கு வந்து போகும் தலைவர்கள் உண்மை நிலைப்பாட்டை மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களின்போது வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் அரசின் விசமத்தனமான பிரச்சாரம் பெரிதாக எடுபடாது. களத்திலுள்ள இராணுவ வீரர்களை உற்சாகப்படுத்தவும், புதிய இராணுவத்தினரை இணைத்துக் கொள்ளவுமே



இந்தப் பிரச்சாரம் உதவக்கூடியன. ஆனாலும், இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு வெற்றிகாணவில்லை. அதிகாரிகள் ஈவிரட்டியதாகவே செய்திகள் வெளிவந்துள்ளன.

எது எவ்வாறிருப்பினும் மீண்டும் போரொன்று ஏற்படப்போகின்றது என்பது மட்டும் உண்மை. ஆனால், அதன் விளைவு என்னவாகப்போகிறது என்பதுதான் வார்த்தைகளிலே விபரிக்கப்பட முடியாததாகவுள்ளது. ஆயுதயுத்தம் ஒருபுறம் நடக்கப் புலனாய்வு யுத்தமொன்றையும் தமிழர்களுக்கு எதிராக ஆரம்பித்துள்ள இலங்கை இராணுவத்தினர் அப்பக் கடைகள் மூலமாகவும் தமது காய்களை நகர்த்திக் கொண்டுள்ளனர்.

போதைப் பொருட்கள் கலந்த உணவுப் பண்டங்களைத் தமிழ் மக்களுக்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களின் சிந்தனையைச் சிதைத்து, அந்தச் சிந்தனைச் சிதைவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இராணுவத்தினர் திட்டமிடுகின்றனர்.

**ஆளணி அரசு இவைபற்றி எதுவுமே சிந்திக்காது போருக்கான செலவீனங்களையும், பாதுகாப்புச் செலவீனங்களையும் அதிகரித்துள்ளதுடன் தனது கட்சி நலன்களைக் கருத்திற்கொண்டு திறைசேரியிலே போதிய பணம் இல்லாத போதும் ,வேலையற்ற பட்டதாரிகளுக்குக் கண்துடைப்பு நியமனங்களை வழங்கி வருகின்றது.**

இந்த சதி வலையிலே சிக்கிவிடாமல் எமது சமுதாயத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவரது கைகளிலும் உள்ளது. இதனை உணர்ந்து அனைவரும் இலங்கை அரசின் புலனாய்வுப் போரை எதிர் கொள்ளத் தயாராகவேண்டும்.

இலங்கை அரசுடன் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்டவையும் இணைந்து மிக இரகசியமான முறையிலே புலனாய்வுப் போரை நடாத்தி வருகின்றனர். இது விடுதலைப் புலிகளை மட்டுமன்றி ஒட்டுமொத்தத் தமிழினத்தையுமே அழிக்கத் திட்டமிடும் அரசின் கபடத்தனமாகும். இது தொடர்பான விழிப்பை எமது மக்கள் பெறும்போதுதான் இலங்கை அரசினதும், அதன் புலனாய்வுப் பலிகளினதும் திட்டம் கனவாகிப் போகும். இந்த வகையில் பல்கலைக்கழக மாணவர்கள் கலட்டிப் பகுதியிலுள்ள அப்பக் கடையை அகற்றுவதற்கு எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது. தோட்டா சுடவந்த இராணுவம் அப்பம் சுட நினைத்தால் எங்கள் உள்ளங்கள் சும்மாயிருக்குமா என்பதை உணர்த்தியுள்ளார்கள் பல்கலைக்கழக மாணவர்கள்! ✡




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈராக்கின் பலூஜா நகரில்

# அமெரிக்க விமானப்படை தாக்குதலில்; ஐவர் பலி, முப்பத்திரண்டு பேர் காயம்!

ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் ஐவர் உயிரிழந்ததுடன், 32 பேர் காயமடைந்தனர்.


பலூஜாவில் உள்ள விமான எதிர்ப்புக் 'கருவியை அழிக்கும் நோக்கத்தில்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதென இராணுவம் தெரிவித்தது,

எங்களது விமானத்தைத் தாக்க தீவிரவாதிகள் முயன்றனர். அதற்குப் பதிலடியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதென அமெரிக்க இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அமெரிக்க விமானங்கள், அல் அஸ்கர் பகுதியில் இரண்டு குண்டுகளை வீசியதாகவும், இதில் - 15 வீடுகள் மற்றும் கார்கள் சேதமடைந்ததாகவும், சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் இருவர் இறந்துள்ளதாகவும், 9 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொது மருத்துவமனை மருத்துவர் அப்துல் ரஹ்மான தெரிவித்தார்.

மேலும், தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியிலும் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதில், இருவர் காயமடைந்தனர்.



ஏவுகணையைத் தடுக்கும் வல்லமை கொண்ட "ஏரோ" ஏவுகணை அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள நடமாடும் ஏவுதளத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை ஏவப்பட்டது. அமெரிக்காவும் - இஸ்ரேலும் கூட்டாக இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளன.

# பிரான்ஸ் பிரஜைகள் ஈ-ராக்கில் கடத்தல்!

பிரான்ஸ் நாட்டில் உள்ள முஸ்லிம் மாணவிகள் தலைமுடி பர்தா அணிந்து செல்வதற்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக - ஆசிரியர்கள், மதத்தலைவர்களுக்கு கல்வி மந்திரி அறிக்கை அனுப்பியுள்ளார். இதற்கு, முஸ்லிம் மத அமைப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து உள்ளனர். இது தொடர்பாகக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தச்சட்டம் தீவிரவாதிகள் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஈராக் நாட்டில் வேலை செய்யும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரண்டு பேரைத் தீவிரவாதிகள் கடத்திச்சென்று விட்டனர். அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால், பிரான்ஸில் முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிந்து வருவதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டும் என்று தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலக நோக்கு

### தாக்குதல் நடத்தத் திட்டமாம்

# பாகிஸ்தான் பிரஜை உட்பட இருவர் அமெரிக்காவில் கைது!



அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ்சின் மக்கள் குடியரசுக் கட்சியின் மாநாடு இடம்பெறவிருந்த இடத்தினை வேவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அமெரிக்கர் ஒருவரும், பாகிஸ்தானியர் ஒருவரும் நியூயோர்க் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மக்கள் குடியரசுக்கட்சியின் மாநாடு இடம்பெறவிருந்த ஹேஅல்ட் சதுக்கத்துக்கு அருகில் உள்ள புகையிரத நிலையத்தில் வைத்து 19 வயதுடைய அமெரிக்கரான ஜேம்ஸ் அல்ஷாலி மற்றும் பாகிஸ்தானியரான மாட்டின் செறாஜ் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களது கைது தொடர்பாக கருத்துத் தெரிவித்த நியுயோர்க் பொலிஸ் அதிகாரி ஒருவர் இவர்கள் இருவரிடமும் ஆயுதங்களோ, வெடிபொருட்களோ எதுவும் காணப்படாத போதும், இவர்கள் மக்கள் குடியரயரசுக் கட்சியின் மாநாட்டின் மீது தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே வந்திருந்ததாகத் தெரிவித்தார்.


மேலும் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

ஆனால், இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பி.பி.ஸியின் நியுயோர்க் நகரப் பிரதிநிதி - இவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதாரம் இல்லையென்றும், இவர்களுக்குத் தீவிரவாத அமைப்புக்கள் எதனுடனும் தொடர்பில்லையென்றும் தெரிவித்தார்.

இதேசமயம், ஜோர்ச் புஷ்ஸிற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 264 பொதுமக்கள் நேற்று முன்தினம் அமெரிக்கப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடியரசுக் கட்சியின் மாநாடு இடம் பெறவிருந்த ஹேஅல்ட் சதுக்கத்துக்கு துவிச்சக்கர வண்டியிற் சென்றுகொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மக்கள் குடியரசுக் கட்சிக்கும், ஜோர்ச் புஷ்ஸிற்கும் எதிரான சுலோகங்களை ஏந்திச்சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கில் ஆயுதப் போராட்டத்தை ஷியா மதத்தலைவர்கள் நிராகரிப்பு!



ஆயுதப்போராட்டத்தின் மூலம் அமெரிக்கப் படைகளுக்கெதிராக செயற்படுவது தற்போதைய வன்செயல்களுக்குத் தீர்வாக இருக்க மாட்டாதென ஈராக்கின் ஷியா முஸ்லிம்களின் மதத்தலைவர்கள் நால்வர் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், நீண்டகாலத்துக்கு வெளிநாட்டுப் படைகள் ஈராக்கில் நிலைகொள்ளுமாக இருந்தால், சமாதானப் பேச்சுவார்த்தை முடிவுக்கு கொண்டுவரப்படுமென நான்கு மதத் தலைவர்களில் ஒருவரான ஷேக் அலி நஜாவி தெரிவித்தார்.

இந்த மதத்தலைவர்கள் நால்வரும் ஆயதுல்லா அலி சிஸ்ராணியை நஜாவ்வில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். நஜாவில் இடம்பெற்று வந்த வன்செயல்களை மதத்தலைவர் ஆயதுல்லா அலி சிஸ்ராணி தலையிட்டுத் தீர்த்து வைத்த இரண்டாம் நாள் இவர்களுக்கிடையே சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

ஈராக்கின் ஷியா முஸ்லிம்கள் சிரேஷ்ட ஷியா பிரிவு மதத்தலைவர்களின் கருத்தைக் கேட்பதற்கும், அவர்களைப் பின் தொடரவும் தயார் நிலையில் இருப்பதாக, பி.பி.ஸியின் மத்யூ பிறைஸ் தெரிவித்தார்.

இதேவேளை - ஈராக் இடைக்கால அரசின் அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் நஜாவ் நகருக்கு அமெரிக்காவின் பிளக் ஹொக் ஹெலிகொப்ரரில் சென்று ஷியா மதத்தலைவர் ஆயதுல்லா அலி சிஸ்ராணியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளன.

இவர்களது கலந்துரையாடலில், நஜாவ் நகரை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக ஆராயப்பட்டது. அத்துடன், இந்தக்குழுவினர் இமாம் அலி பள்ளிவாசலுக்கும் சென்றனர்.

நஜாவ் நகரில் இடம்பெற்று வந்த வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக மதத்தலைவர் அல் சிஸ்ராணிக்கு நன்றி தெரிவிக்கவும், சமாதான ஒப்பந்தத்தை காத்திரமான முறையில் செயற்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவுமே தாம் நஜாவ்வுக்கு வருகை தந்ததாக அமைச்சர் குழுவின் தலைரான காசிம் தாவூத் தெரிவித்தார்.

# சீன நாட்டு தொழிலதிபருக்கு 18 ஆண்டு சிறைத்தண்டனை

சீனாவில் பிரபல தொழிலதிபர் யாங்பின் கடந்த 2001ஆம் ஆண்டு சீனாவில் 2ஆவது பணக்காரராக இவர் இருந்தார். பூக்களை ஏற்றுமதி செய்து வியாபாரம் செய்து வந்ததால் சீன மலர்களின் அரசன் என்று அவர் அழைக்கப்பட்டார்.

இவர் பொருளாதார ரீதியாக மோசடி செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. இது தவிர லஞ்சம் பெற்றதாகவும், முறைகேடாக நிலங்களை பயன்படுத்தியதாகவும் கூறப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் முடிவில் யாங்பின் தவறு செய்து இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு 18 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# பாகிஸ்தானின் 23ஆவது பிரதமராக சௌகத் அஜீஸ் பதவியேற்றார்!



பாகிஸ்தானின் 23 ஆவது பிரதமராக சௌகத் அஜீஸ் நேற்று முன்தினம் பதவி ஏற்றார். ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். ஜனாதிபதி மாளிகையில் எளிமையாக நடந்த பதவியேற்பு விழாவுக்கு அரசு மற்றும் இராணுவ அதிகாரிகள், கூட்டணி கட்சியினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அஜீஸ் தலைமையிலான அமைச்சரவை செப்ரெம்பர் 1 ஆம் திகதி பதவி ஏற்கும்.

முஷாரப்பின் நெருங்கிய நண்பரான அஜீஸ் முன்னாள் நிதியமைச்சருமாவார். 1999 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் முஷாராப் ஆட்சியைக் கைப்பற்றியதும் நிதியமைச்சரானார்.

எதிர்க்கட்சியின் புறக்கணிப்புக்கு இடையே பாகிஸ்தான் நாடாளுமன்றம் அஜீஸை பிரதமராக கடந்த வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுத்தது.

1998 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அணு ஆயுத சோதனை நடத்தியதை அடுத்து அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலை சரி செய்வதில் பெரும்பங்காற்றி பாராட்டுப் பெற்றவர் அஜீஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக்தாத்தில் மோதல் ஏழு பேர் உயிரிழந்தனர்

(பாக்தாத்)

ஈராக்கின் பாக்தாத் நகரில் அமெரிக்கப் படையினரும், சதார் ஆதரவு கிளர்ச்சிவாதிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் குறைந்தது ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் நேற்று இடம் பெற்றது. நஜாவ் நகரில் கடந்த மூன்று வாரங்களாக சதார் ஆதரவுப் படைகளுக்கும், அமெரிக்கா தலைமையிலான படைகளுக்குமிடையில் இடம்பெற்று வந்த மோதல் முடிவுக்கு வந்த பின்னர், இந்த புதிய தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை - ஆயுதங்களை கீழே போட மறுக்கும் இஸ்லாமிய ஆயுதக்குழுக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி நேற்று தெரிவித்தார்.

இந்த ஆயுதக்குழுக்களால் ஈராக்கில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய கம்பனி குண்டு வைத்து தகர்ப்பு

நேபாள நாட்டில் மாகாவான்பூர் மாவட்டத்தில் அழகு சாதனப் பொருட்களை தயாரிக்கும் கம்பனி உள்ளது. 'நேபாள் லீவர்' என்ற பெயருடைய இந்த கம்பனி இந்தியாவுக்கு சொந்தமான இந்துஸ்தான் கம்பெனியுடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 15 பேர் புகுந்தனர். அவர்கள் கம்பனியின் 3 இடங்களில் குண்டு வைத்து தகர்த்தனர் இதனால், கம்பனியின் பெரும் சேதம் ஏற்பட்டது. தீவிரவாதிகள் தாக்குதலில் அதிஷ்டவசமாக யாரும் காயம் அடையவில்லை இதற்கு இந்திய தூதரகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரை அடைத்து வைத்து போராட்டம் நடத்திய தனி நபர்கள்!

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி புஸ்பமாலாவின் பிரச்சினை தொடர்பாக தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது எனத் தெரிவித்து புஸ்பமாலாவின் ஆதரவாளர்களான தனியார் சிலர் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரை அவரது அலுவலகத்தில் அடைத்து வைத்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் சர்வதேச மாணவர் பேரவை உறுப்பினர் மற்றும் பேராசிரியர் ஒருவருடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த வேளையில் குறிப்பிட்ட நபர்கள் துணைவேந்தரது அலுவலகக் கதவை மூடி போராட்டம் நடத்தினர்.

பின்னர் துணைவேந்தரின் பணிப்புரைக்கு அமைய குறிப்பிட்ட மாணவர் பேரவை உறுப்பினரும், விரிவுரையாளரும் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் - துணைவேந்தரை அலுவலகத்தினுள் வைத்துப் பூட்டுவதற்கு தனியாருக்கு உரிமை கிடையாது என்றும் அவரை வெளியேற்ற அனுமதிக்குமாறும் போராட்டம் நடத்தியவர்களைக் கேட்டுக் கொண்டதையடுத்து துணைவேந்தர் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த துணைவேந்தர்- யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் போராட்டம் நடத்துவதற்கு தனியார் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், இவ்வாறு போராட்டம் நடத்துபவர்கள் வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்தப்பிரச்சினை தொடர்பாக கருத்துத் தெரிவித்த யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பல்கலைக்கழக வளாகத்தினுள் தனியார் சிலரால் துணைவேந்தர் தடுத்து வைக்கப்பட்டமை வெறுக்கத்தக்க விடயமாகும். இத்தகைய தனியாரது செயற்பாடுகளை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனவும் தெரிவித்தார்.

அத்துடன், குறிப்பிட்ட மாணவியின் பிரச்சினையை தனியார் கையாள முற்பட்டால், அது பாரிய பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என்றும் இந்த மாணவியின் பிரச்சினை தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று கலந்துரையாடல் ஒன்றினை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## 'விடுதலைப் புலிகள்' இன்று வெளிவருகிறது!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆவணி மாதத்திற்குரிய 118 ஆவது குரல் 'சமாதானத்திற்கு எதிரான பேரினவாதக் கூச்சல்கள்' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகிறது.

'அமைதி முயற்சியும் சர்வதேசத்தின் தார்மீகக் கடமையும்' எனச் சொல்லும் ஆசிரிய தலையங்கத்துடன் வரும் இந்த ஏட்டில், க.வே. பாலகுமாரன் எழுதிய 'வரலாற்றின் விளைபொருள்' என்ற கட்டுரையும், சாரணன் எழுதிய ஜே.வி.பிக்கு யுத்தம் வேண்டும்' என்ற கட்டுரையும், எல்லாளன் எழுதிய 'தீர்வுத் திணிப்பைத் தமிழினம் ஏற்காது மற்றும் பிரபுத்திரன் எழுதிய 'யுத்தத்திற்கு ஆயத்தமாக இரு சமாதானம் வரும்' போன்ற அரசியல் கட்டுரைகளும் கலாநிதி க.சோமாஸ்கந்தன் எழுதிய 'இனப்படுகொலையும் ஈழத் தமிழர் வரலாறும் என்ற கட்டுரையும் தமிழழகன் எழுதிய 'எதிரிக்கு சிம்ம சொப்பனம்' என்ற கட்டுரையும் இடம் பெறுகின்றன.

சூடானின் போராட்ட விபரிப்பான 'சர்வதேசமயமாக்கப்படும் டார்பர் நெருக்கடி' என்ற கட்டுரையும் மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது.

### பக்தர்களின்..

இந்த விபத்தில் காயமடைந்த அனைவரும் வரணி தாவளை மற்றும் இயற்றாலைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு : செ.தங்கலட்சுமி (வயது 47), ஞா.ரட்ணசிங்கம் (வயது 16), ச.ருபிந்தன் (வயது 03), மி.கஸ்தூரி (வயது 03), கு.வசீகரன் (வயது 11), ஜெ.நாகம்மா (வயது 66), கு.சுதர்மன் (வயது 20), பு.இந்திராதேவி (வயது 33), க.பார்த்தீபன் (வயது 13), இமயூரி (வயது 01), சி.கோகுலன் (வயது 08), ந.தங்கராணி (வயது 18), த.பகீரதன் (வயது 10), ஞா.சொர்ணா (வயது 05), ஞா. பிரணவன் (வயது 03), ஞா.செல்வமலர் (வயது 42), ஞா.இரத்தினசீலன (வயது 16), கி.கிருஷ்ணரூபன் (வயது 29), ந.பிரசாந் (வயது 07), வ.சிவகாமி (வயது 54), இ.அன்னலட்சுமி (வயது 52) ஆகியோரே காயமடைந்து மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில், ஞா.பிரணவன், ஞா. செல்வமலர், ஞா.இரத்தினசீலன், கி.கிருஷ்ணரூபன், ந.பிரசாந், வ.சிவகாமி, இ.அன்னலட்சுமி ஆகிய ஏழு பேரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (14,202)

### யுத்த நிறுத்த....

துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் புதிய காவலரண்களை விடுதலைப் புலிகள் அமைத்து வருகின்றனர் என்ற கடற்படையினரின் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

கடற்படையினரின் இந்தக் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கைதிகளை பரிமாறிக்கொள்வது தொடர்பாக இரு தரப்புடனும் பேச்சுக்களை நடத்திவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)



## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 35 | 38 | 29 | 102 |
| சீனா | 31 | 17 | 14 | 62 |
| ரஷ்யா | 27 | 27 | 38 | 92 |
| அவுஸ்ரேலியா | 17 | 16 | 16 | 49 |
| ஜப்பான் | 15 | 10 | 12 | 37 |
| ஜேர்மனி | 14 | 16 | 18 | 48 |
| பிரான்ஸ் | 11 | 08 | 12 | 31 |
| இத்தாலி | 09 | 11 | 11 | 31 |
| பிரிட்டன் | 09 | 09 | 12 | 30 |
| கியூபா | 09 | 07 | 11 | 27 |
| உக்ரெய்ன் | 09 | 05 | 09 | 23 |
| தென்கொரியா | 08 | 12 | 09 | 29 |
| ஹங்கேரி | 08 | 06 | 03 | 17 |
| ருமேனியா | 08 | 05 | 06 | 19 |
| கிறீஸ் | 06 | 05 | 04 | 15 |
| நோர்வே | 05 | 00 | 01 | 06 |
| நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| பிரேசில் | 04 | 03 | 02 | 09 |
| சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| கனடா | 03 | 06 | 03 | 12 |
| துருக்கி | 03 | 03 | 03 | 09 |
| போலந்து | 03 | 02 | 05 | 10 |
| நியூஸிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| தாய்லாந்து | 03 | 01 | 04 | 08 |
| பெலாரஸ் | 02 | 05 | 08 | 15 |
| ஒஸ்ரியா | 02 | 04 | 01 | 07 |
| எதியோப்பியா | 02 | 03 | 02 | 07 |
| ஈரான் | 02 | 02 | 02 | 06 |
| ஸ்லோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |
| பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| ஜமேக்கா | 02 | 01 | 02 | 05 |
| உஸ்பெகிஸ்தான் | 02 | 01 | 02 | 05 |
| மொரோக்கோ | 02 | 01 | 00 | 03 |
| டென்மார்க் | 02 | 00 | 06 | 08 |
| ஆர்ஜென்ரீனா | 02 | 00 | 04 | 06 |
| சிலி | 02 | 00 | 01 | 03 |
| கஸகஸ்தான் | 01 | 04 | 03 | 08 |
| கென்யா | 01 | 04 | 02 | 07 |
| செக் குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| தென்னாபிரிக்கா | 01 | 03 | 02 | 06 |
| குறோசியா | 01 | 02 | 02 | 05 |
| லிதுவேனியா | 01 | 02 | 00 | 03 |
| எகிப்து | 01 | 01 | 03 | 05 |

## அரசு யுத்தத்தை ஆரம்பிக்குமேயானால்...

களையும் சேர்த்து எமக்கு உதவி செய்தது.

'ஜெயசிக்குறு' படை நடவடிக்கை என்பது உண்மையிலேயே உலகத்தின் யுத்தம். விடுதலைப் போராட்ட அமைப்புக்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்குடன் பல நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு தமமாலான உதவிகளைச் செய்தது மட்டுமல்லாது, யுத்தகளத்துக்கு நேரடியாகச் சென்று ஆலோசனைகளையும் வழங்கின.

ஆனால், அவற்றின் எதிர்பார்ப்புக்களையும் மீறி எவ்வாறு அந்தக் களம் அவர்களுக்கெதிராக மாற்றியமைக்கப்பட்டதென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

'ஜெயசிக்குறு' நடவடிக்கை உலகத்தின் யுத்தம் என்பது வெகு விரைவில் வெளிச்சத்துக்கு வரும்.

ஆயிரக்கணக்கான உயிர்களை விலையாகக் கொடுத்தது எங்களது போராட்டம். எனவே இந்தப் போராட்டத்தில் எந்தவொரு தலையீட்டையும் ஏற்றுக்கொள்ளமுடியாது. தற்போதைய சமாதான காலத்தின் வெற்றியாக தமிழரின் விடுதலை தொடர்பாக ஒரு கோடு தெளிவாக வரையப்பட்டுவிட்டது. எனவே இந்தக் கோட்டின் ஒரு பக்கத்துக்குள் மக்கள் தங்களை அடையாளப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

தற்போதைய சமாதான காலத்தில் இலங்கையின் அரசியல், இராணுவப் போக்குகளை தாங்களாகவே அம்பலப்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டு சிக்கலுக்குள் தவிக்கிறது அரசு.

ஆனால், நாங்கள் முதிர்ச்சியின் வெளிப்பாடாக இவற்றை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அரசாங்கம் போரை ஆரம்பித்தால் அதனை மீள முடியாத சிக்கலுக்குள் தள்ளுமளவிற்கு நாங்கள் வளர்ச்சி கண்டுள்ளோம்.

எந்தக் கணத்திலும் தமிழர்களுக்கு வெற்றி கிடைக்கும் என்பதையே ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி மற்றும் இதர கட்சிகளின் இன்றைய நிலைப்பாடுகள் எடுத்தியம்புகின்றன.

சர்வதேச நிலைப்பாட்டுக்கு ஏற்ப எமக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முனைப்பில் வெற்றிகண்டு சர்வதேச உறவுகளின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தியுள்ளோம் இலங்கைத் தீவில் ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

தமிழர்களின் உரிமைகளுக்கான கோரிக்கையான 1920 இல் அருணாசலத்தால் முன்னெடுக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு தந்தை செல்வாவால் இனி இதைவிட்டால் வேறு வழியில்லை தமிழீழமே இறுதி முடிவென அறிவிக்கப்பட்டதையே நாம் இப்போது வடிவத்தை மாற்றி முன்னெடுத்துச் செல்கின்றோமே தவிர இந்தப் போராட்டம் நாம் ஆரம்பித்த ஒன்றல்ல.

இன்றைய சமாதான காலத்திலும் எங்களை நோக்கி குற்றச்சாட்டுக்கள சுமத்தப்படுகின்றன. ஆனால், சமாதான முன்னெடுப்புக்களினூடே பயணித்த எம்மிடையே கருணா என்ற குழப்பக்காரனைக் கண்டுபிடித்து போரைத் திணித்து, கொலைகளை ஆரம்பித்தது யாரென்பதை நோக்க வேண்டும். நாம் போர் விரும்பிகளல்லர். வாழ்வதற்காகவே போராடுபவர்கள்.

எங்களுக்கு கிடைத்தற்கரிய வகையில் காலத்தின் வரவாகக் கிடைத்திருக்கும் ஒப்பற்ற தலைவன் காலத்தில் எமது விடுதலையை அடைந்தே தீருவோம்.

உலக வல்லரசுகளின் அடுத்த கட்ட நகர்வுகளை தற்துணிவோடும் தயார்நிலையில் இருந்துகொண்டே அவர் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் எனவும் பாலகுமாரன் தெரிவித்தார்.

### 2 ஆவது ...

ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் உரிய வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர். இந்தத் திட்டத்துக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பாதுகாப்பை...

யாரென அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே ஆட்களின் அடையாளங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சில சரத்துக்களை உள்ளடக்குவது பொருத்தமானது.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா விலக்கப்பட்டதைத தொடர்ந்து இந்த நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

எனவே, அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளை நடத்தி தமது யோசனைகளை யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்வது காலத்தின் தேவையாகும்.

இதனை குறுகிய காலத்தில் செய்யமுடியாவிட்டாலும் இது குறிதது அரசு கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்
சீட்டிழுப்பு இல:- 1643 திகதி:- 27.08.2004
வெற்றி இலக்கங்கள்
G 9 2 1 1 7 8
அடுத்த சுப்பர் பரிசு 221 லட்சத்துக்குமேல்

மரண அறிவித்தல்
விஜயநாதன் விக்னேஸ்வரராசா
(ராஜன் - அத்தான்)
(முன்னாள் உத்தியோகத்தர் - லங்கா லிமிட்டெட்)
தெல்லிப்பளை விமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயநாதன் விக்னேஸ்வரராசா நேற்று முன்தினம் (28.08.2004) சனிக்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.08.2004) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காராகரம்பை இந்து மயாகனத்தில் தகனஞ்செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
ஏழாலை தெற்கு,
ஏழாலை
தகவல்: மனைவி (சாரதா),
சகோதரன் (குருதேவ்)

நமது ஈழநாடு
விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

மரண அறிவித்தல்
7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.